உ

சிவமயம்.

81

ஸ்ரீகயிலாசபரம்பரை திருவெண்ணைநல்லூர்

மெய்கண்டசந்தானம்,

81

திருமங்கலம்

# தெய்வராய தேசிக

## சுவாமிகள் ஆதீன

# பரம்பரை.

14531

பெருநாழி யென்னும் பழசைநகர்

வெ. ஆ. குமரய்யக் கவிராயர்

எழுதியது.

விருதுநகர்,

சச்சிதானந்தம் பிரஸில்

பதிப்பித்தது.

1926

# INTRADUCTION

Time to time greatmen are bornto uplift the human race. Great men are of as many different kinds as there are different aspects of human activities. Of all human activities, those which raise man above brute nature, are more important than others; for the ultimate aim of man is to assimilation with the deity. There have been several such men. **DAIVARAYA DESIKAR** was one of those great men. whose life has been the means of elevating his fellow men. The life of such men is worth publishing. **M. R. Ry. A. Kumariah Nadar of Perunali,** the author of the history of Daivaraya Desikar and of his descendants, has taken great pains to harmonise it with the available historical records of the time it deals with.

This little book, in addition to the history of Daivaraya Desikar and his descendants, gives the history of the Nadars of the places,

where Desikar and his descendants lived. The author has displayed the spirit of a good historian. He has not followed the method of exaggeration and deification of his hero. The author's scholarship desepves encouragement from all lovers of Tamil literature.

**A. DAVID MASSILLAMANI (M. A. Chicago.)**

Virudhunagar. } *Head Master,*

15th March 1926. } **Kshatriya Vidhyasala High School.**

# முகவுரை

இப்புவியின்கண்ணுள்ள மனுஷ ஜாதியின் முன்னேற்றத்திற்காக, இடையிடையே, காலாகாலத்தில் மஹான்கள் தோன்றுவது இயல்பு. இப்பேர்ப்பட்ட அவதார புருஷர்கள், மானிட வர்க்கத்தின் தொழில் துறை முயற்சிகள் எத்தனை வகைப்படுமோ, அத்தனை வித்தியாசமான குண குணங்களுடன் தோன்றுகிறார்கள். இவ்விதமான முயற்சிகளில், மாந்தரின் மிருகத் தன்மையை அறவே யகற்றி, அவர்கள் தெய்வீகத்தை அடையச்செய்யும் முயற்சியே மிகவும் விசேஷமானது, ஏனெனில், மானிட வாழ்க்கையின் ரகசியம் இறுதியில் ஜீவாத்மா பரமாத்மாவையறிந்து, ஐக்கியப்பட்டு விடுவதே. இவ்வித ஆத்மசேவை செய்து வந்த புனிதரில், **தெய்வராய தேசிகர்** ஒருவர். இவ்விதமான மஹான்களின் ஜீவிய சரித்திரத்தை அனைவரும் அறிந்து உய்யுமாறு பிரசுரம் செய்வது ஒரு பெரிய நன் முயற்சி. பெருநாழியில் வசிக்கும் மகா-ா-ா-ஸ்ரீ ஆ. குமரய்ய நாடார் அவர்கள் தெய்வராய தேசிகருடைய சரித்திரத்தையும், அவரது சந்ததியாரின் சரித்திரத்தையும், அந்தந்தக் காலங்களிலுள்ள மூல சாசனங்களையும், தேச சரித்திரங்களையும் அனுசரித்து அவைகளுக்கு இசைய எழுதுவதில் வெகு பிரயாசம் எடுத்திருக்கிறார்கள்.

இச்சிறு புத்தகம் மேற்கூறிய மஹா தேசிகருடைய சரித்திரத்தையும், அவர் சந்ததியாரின் சரித்திரத்தையும் சொல்லுவது மட்டுமன்றி, அவ்வக் காலங்களில், அவ்வவ் விடங்களில் வசித்த நாடார் குல சரித்திரத்தையும் செவ்வனே எடுத்துரைக்கிறது. இப்படி எழுதுமிடத்து, நம் ஆசிரியர், வேறு சிலரைப்போல், தம் கதாநாயகர்களை, இதிகாச புராண புருஷர்களைப்போல வீணாகப்பெருமித்துப் பேசாமல், தற்கால உண்மையான சரித்திர ஆசிரியரின் குணங்கள் அமைந்தவராய், உள்ளதையுள்ளவாறே யுரைத்திருக்கிறார். இத்தகைய ஆசிரியரின் தமிழ் வித்வத்தை, தமிழபிமானிகள் யாவரும் போற்றுவது அவசியம்.

இப்படிக்கு

ஏ. டேவிட் மாசில்லாமணி,
(எம். ஏ. சிக்காக்கோ.)
தலைமை உபாத்தியாயர்,
க்ஷத்திரிய வித்யாசாலை ஹைஸ்கூல்.

விருதுநகர்.
15—3—26.

# பாயிரம்.

## அகவற்பா.

குடகு வேங்கடங் குணகடல் குமரி
யிடமுள் திராவிடத் தெல்லையுட் சிறந்த
பூமகள் வதனம் போற்பொலி வுற்ற
பாமது ரைப்பதி மன்னவ னாட்டுக்
கொருமங் கலம்போ லொளிதரு கின்ற
திருமங் கலமெனுஞ் சீர்சால் நகரில்
சைவமெ னும்பயிர் தழைத்திட வந்த
தெய்வ ராய தேசிக சுவாமி
பரம்பரைச் சரிதம் பாருளா ரெவரும்
விரும்பிப் படித்திட வெளிப்படைத் தமிழால்
காலமு மிடமுங் கணக்குடன் தேச
நூலதற் கொப்ப நுவன்றன னணுவுங்
கூட்டிக் குறைத்துக் கூறா துள்ளதை
நாட்டிப் புகழை நாட்டினன் பழநைச்
நகரான் குமரைய நாவலன்
சகமுளோர் மதிக்குந் தமிழ்வல் லோனே.

அ. கந்தசாமிக் கவிராயர்,
விருதுநகர்.

# நூலாசிரியர் வேண்டுகோள்.

ஸ்ரீமத் தெய்வராய தேசிகர் சரித்திரமாகிய இந் நூலை அரும் பிரயாசையுடன் கையேட்டுப் பிரதிகளைக் கொண்டும், கன்ன பரம்பரையைக்கொண்டும், பல தேச சரித்திரங்களைக் கொண்டும் ஆராய்ந்தெழுதி யிருக்கிறேன். இன்னும் அநேக விஷயங்களைச் சேர்க்கவிட்டு விட்டதாகத் திருமங்கலம், சிவகாசி முதலிய விடங்களிலிருந்து அநேகங் கடிதங்கள் வந்திருக்கிறது. எனது செவிக்கும் அநேக விஷயங்கள் எட்டியிருக்கிறது. அவைகளையும், இன்னும் எனக்குக் கிடைக்கும் சமாசாரங்களையும் 2-வது பதிப்பில் அச்சிட்டு வெளியிடத் தயாராயிருக்கிற விபரம் வந்தனத்தோடு தெரிவித்துக்கொண்டேன்.

ஆ. குமரய்யக் கவிராயர்,

பழசைநகர்.

சிவமயம்.

# ஸ்ரீ கயிலாச பரம்பரை, திருவெண்ணெய்நல்லூர், மெய்கண்ட சந்தானம், திருமங்கலம்
# தெய்வராய தேசிக சுவாமிகள்
## ஆதீன பரம்பரை.

காப்பு.

வெண்பா.

தேயம் புகழவருந் தென்னவர்கோ வாந்தெய்வ
ராயகுரு தேசிகனு யன்றுவருந்—தூயோர்ண்
பரம்பரையான் கூறவருள் பாலிக்கு மாதி
பரம்பரையா னீன்றமுதற் பாலன்.

சிவஸ்துதி.

பகைக்குடை யாவமாங்கே பருப்பதி தாளத்தூய்வெண்
ணகைக்கிடை மதியின்மாசை நளிர்மணியொளியி னீக்கித்
தகைக்குடை யுறவில்வைகுஞ் சடைப்பரந் தாங்குவேணிச்
சிகைக்கடைச் சூலபாணி சேவடி சிந்தைசேர்ப்பாம்.

தெய்வராய குருதேசிகர் துதி.

பூவரா னுகள் மாநதி நீர்வளம்
பொங்கிமா முடி மன்னவர் மற்றவர்
யாவ ரானும் புகழ்திரு மங்கல
மான்னவர் நகர் தோன்றி யருளுரு

பூவ ராயமர் திபரர் பர
மூர்த்தியா ரடி போற்று முதல்வனுந்
தேவ ராயசு வாமி திருப்பதஞ்
சிந்தித் தன்னவர் சீரை விளம்புவாம்.

## நூல்.

பார்விரி தேவபாடை பாணினிக் கியந்தோ னீயும்
நாவிரி தமிழினீதி ஞானதெய் வீகங் கொண்டு
தேவிரி வடபாலோடு தென்றிசை சமம தாகக்
காவிரி கொணர்ந்தோன் வைகுங் காரணைக் கன்னிநாடு.

ஆதிதேவன் அருளிய அருந்தமிழ் விரியச்செய்த பரமாசாரியார் அகஸ்திய மஹாமுனிவர் அமர்ந்ததும், அங்கயற்கண்ணம்மை யரசாண்டதுமாகிய பாண்டிநாட்டில் திருமதுரைப்பதியின் தெற்கே 12-மைல் தூரத்திலுள்ளது மான திருமங்கலமென்னுந் திருநகரம் பழமையான நகரங் களிலொன்றும். இந்நகர் மேல்பக்கமாயுள்ள நதிவளத்தாலும், கீழ்பக்கமாயுள்ள ரயில்வேத் தொடரமர்ந்து செல்லுந் தலத்தாலும், இயற்கைப் பொருளுஞ் செயற்கைப் பொருளும் பெருகி மிக்க செல்வமாயிருக்கப் பெற்றதாகும்.

16-ம் நூற்றாண்டு மத்தியில் நடந்த நாயக்க பாண் டிய யுத்தத்தில் பாண்டியர் தோற்று அரசு வேற்றரசாய் விட பாண்டிய மரபினராகிய நாடார்கள் மதுரையிலுள்

ளார் பலர் இந்நகர் வந்து தங்கியதாய்த் தெரிகிறது. பூர்வம் நாடார்கள் தலைக்கட்டு 6000 இருந்ததாகச் சொல்கின்றனர்; தற்காலம் நாடார்கள் தலைக்கட்டு நானூறுக்கு மேலுள்ளன. இவர்களுக்குள் * நாட்டாண்மைக்காரர் மூவருளார்; இந்நகர் நாடார்கள் ஆதிவியாபார ஸ்தலங்களிலொன்றாயுள்ளது. பூர்வம் நாடார்களேற்படுத்திய பேட்டை (ஸ்தலம்) பிரபலமாயிருந்தபடியால், குற்றாலக்குறவஞ்சி யென்னும் நாடகத் தமிழில்,

○ "தஞ்சை சிராப்பள்ளிக் கோட்டை — தமிழ்ச்
சங்க மதுரை தென் மங்கலப் பேட்டை"

நூலாசிரியர்: திரு-(அழகு) என்னும் பதத்திற்குப் பிரதியான தென்-(அழகு) என்னும் பதத்தை இசை பொருந்துவதற்காக உபயோகித்திருக்கின்றபடியால், திரு-

---

* நாட்டாண்மை. நாட்டு-ஆண்மை-ஆள்மை. அதாவது:- நாட்டை ஆளும் வீரியம்: அல்லது ஆளுந்தன்மை யென்பதான அர்த்தங் கொடுக்கும். நாடு என்பது இங்கு நாடுகள் சிறப்பதற்கு மூலாஸ்பதமாகிய கிராம ஜனங்களை ஆகுபெயரா யுணர்த்தி, ஆண்மை அவர்களை ஆளுகிற அல்லது தலைமையாயிருந்து வருகிற தன்மையைக் குறிக்கும். நாட்டாண்மை, அம்பலம் என்னுந் தலைமைப் பெயர்கள் நாடார்கள் பரம்பரையாய்க்கிராமங்களிலிருந்துவருகின்றன.

○ குற்றாலக் குறவஞ்சி நூலாசிரியர்கிய திரிகூடக் கவிராஜர் காலம் இந்நூலை யேற்றுக்கொண்டு கொடுத்தவர் முத்துவிஜயரெங்க சொக்கநாத நாயக்கராவர் தென்காசியை ஆண்டவர் இவர் பேத்

மங்கலம் தென்மங்கலமென்றாயது. இந்நகரில் நாடார் மரபில் தேவராய நாடாரென்னும் ஓர் திவ்ய பூமானுதித்தனர். இவர் புலால் மறுத்தலாகிய சிவகாருண்ய முடையோராய் நல்லொழுக்கத்தில் நடப்பவராய், சிவபக்தி செய்பவராய்ச் சிறந்து வந்தனர். இவர் காலம் தற்காலமுள்ள தலைமுறை பல கிராணங்களைக்கொண்டு திருமலைநாயக்க ரரசாக்ஷி காலமாகிய கி. பி. 1640., 50-ஆகிய காலங்களாகத் துணியப் படுகின்றது. தேவராய நாடார் திருமங்கலத்தில் பிரபலமாயிருந்து நாடார்கள் நாட்டாண்மை ¶ பொன்னுலிங்க நாடார் அருந்தவப் புத்திரி பொன்னம்மாளை திருமணஞ் செய்தனர்.

---

¶ பொன்னுலிங்கம்: முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் லிங்கமூர்த்தப் பேரானபடியால் அப்பெயரை வகித்த அந்நாடார் குடும்பம் புலாலாதிகளைமறுத்து சைவப் பற்றுளதாயிருந்து வந்திருக்கலாமென்று யூகிக்கப்படுகின்றது.

---

படி வித்துவானுக்குசெய்த நன்கொடைசாசனம் கி. பி. 17, 15 ல் ஏற்பட்டதாக விருக்கிறபடியால் இக்காலம் மங்கம்மாள் அரசாக்ஷி காலமாகவே யிருக்கலாம். திருமங்கலப்பேட்டை அக்காலம் நூல்களிற் புகழ்ந்து கூறும்படியான நிலைமையிலிருந்தமையால் அப்பேட்டை அதற்கு முன்னுள்ள நாயக்க மன்னராட்சி காலத்தில் பாளையப்பட்டு ஜமீன் கிராமங்களிலமைத்த கோட்டைகளைப் போன்று நாடார்கள் தாம் தாம் தங்கியுள்ள நகரங்களிலமைத்த பேட்டைகளில் ஒன்றாகும்.

அம்மாதுடன் இல்லறம் நடத்திவருநாளில் நாடாரினஞ் செய்துவருவதாகிய பொதியெருது வர்த்தகத்திற் புகுந்து வரும் ஊதியத்தால் வாழ்நாளைக் கழிப்பதாயினர். சமுசாரவாழ்க்கையாயிருப்பினும், விதிவழி மதிசாருமென்பதற்கேற்ப புராண விதிகாச நூல்களிற் புத்தி சென்று அவைகளை ஆராயவும்;

"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது." என்று

தெய்வப் புலமையார் செப்பிய திருவாக்கு சிந்தையிற்பதிய அகண்ட பரிபூரண தத்துவமான கடவுள் பக்தியும், விடமிறக்கல், பேய் பிசாசுகளை விலக்கலாகிய மாந்திரீக முறையும் உடையோராயிருந்து வந்தனர். இது பற்றி இவரை நாடார் ஜனங்களும் மற்றவர்களும் புகழ்ந்து மதித்து வருவதாயினர்.

"முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்." என்னும்

பெரியார் வாய்மையைக் கடைப்பிடித்து வரும் இன்னவர் வழக்கம்போல் தன் கூட்டாளிகளாகிய நாடார்களுடன் தன்னூர் வடபக்கங்களான பலவூர்கள் சென்று வர்த்தகஞ் செய்து அம்மையநாயக்கனூர் வந்து தங்கினர். அம்மைய நாயக்கனூர் ஜமீன்தார் நாயக்கராவர்.

அம்மன்னர் புதல்வனை அரவந்தீண்டி ஆங்குள்ளோர் உபயோகிக்கும் மந்திரங்கள், அவிழ்தங்கள் யாவும் பயன்

படாதாகி விடத்தினாலறிவு சோர்ந்தான். 'விட்டுயிரடங்கிற்றன்றே' என்றபடி உயிர்ப்படங்கியது. தனது திருமகன் விடமரணங் கண்ட நாயக்கமன்னர் புத்திரசோக மென்னும் நஞ்சினாற்பொன்றினான்போல் 'புத்திரிலாவிடர் பொறுத்திடலுமாமோ' என்றுவில்லிபாழ்வார் விளம்பியபடி மிக்ககவலையிலாயினர். ஆங்குளார் தேவராயநாடாரைத்தெரிந்தோர் நாடார் மந்திரசித்தியின் றன்மையை யெடுத்து அரசரிடங் கூறிவந்திருப்பதையுஞ் சொல்லினர்; அதுசெய்தி கேட்ட அஜ்ஜமீன்தார் தன்னிடத்துள்ள ஒருவனை யேவி யழைத்துவரவென்க, அவன் அப்படியே சென்று அழைக்க தேவராய நாடார் இச்சித்தமுடையோராய் சேவகனுடன் நடந்துவந்து ஜமீன்தாரைக் கண்டனர்.

வீடிய மனிதன் றனையுமே மறையால்
விடந்தலைக் கேறியே புடலில்
ஓடியதிறக்கிப் பிழைத்திடச் செய்வா
ருலந்திடத் தீண்டிமுன் புற்றிற்
கூடிய வரவை வரவழைத் திடுவார்
கோளராத் தீண்டுசெய் பிழைக்கப்
பாடியகம்ப னுவமையை யேற்பார்
பரமராஞ் சித்தரை யொப்பார்.

### வெண்பா.

மங்கை யொருபாகன் மார்பிலணி யாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களையுஞ்

சீறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே
ஏறிய பாம்பே யிறங்கு. ○

ஆழியான்பள்ளி யணையே யவன் கடைந்த
வாழிவரையின் மணித் தாம்பே—ஊழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுநிற
நாணே யகல நட. ○

பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண்
வீரன் கிடந்துறங்கு மெல்லணையே—ஈரமதிச்
செஞ்சடையான் பூணுந் திருவாபரணமே
நஞ்சுடையாய் தூர நட. ○

என்னும் பாடல்களின் பொருளடக்கமாகிய மந்திரத்தையுச்சரித்து குழையடிப் பார்வைபார்க்க ஜமீன்தார் மகன் ஏறிய விஷமிறங்கி துயின்றெழுந்தவன் போலெழுந்தனன்; ஜமீன்தாரும், ஜமீன்வகை ஜனங்களும், மற்றவர்களும் பேரானந்தமடைந்தனர். ஜமீன்தார் நாடார்திலகத்தை நோக்கி உங்களுக்கு வேண்டியதென்ன? கேட்கக் கடவதெல்லாங் கேட்கவென்றனர். ஜனோபகாரமாய் விளங்கிய தேவராயர் இனோபகாரமாயிதனைக் கூறுவதாயினர். ஜமீன் பிரபு! எங்கள் ஜாதியினர் இப்பக்கமான வூர்களில் பாக்கு, ஏலக்காய், சீரகம், பூடு முதலியவைகள் ஏற்றுமதியாகவும், தென்னாட்டுப் பொருள்களாகிய மல்லி, கடலை முதலியவைகள்

○ இவ்வெண்பாக்கள் தில்லை மூவாயிரவரிலொருவர் சேய் அரவந்தீண்டியிறந்தது பிழைக்கும்படி கம்பநாடர் பாடியவைகளாகும்.

இறக்குமதியாகவும், பொருதிமாட்டு வர்த்தகங்கள் செய்து வருகிறபடியால் அவைகளுக்கு ஸமஸ்தானத்திலும், ஸமஸ்தானத்தைச் சார்ந்த விடங்களிலும், சுங்க வரியில்லாமலும், இந்நகரில் தங்கி வியாபாரஞ்செய்யும்படி பேட்டையொன்று கட்டிக்கொள்ளும்படியாகவும் அனுமதி தந்தருள வேண்டுமென்றனர். ஜெமீன்தார் அப்படியே செய்தனர். * அம்மையனாயக்கனூர்ப் பேட்டையும் அமையப்பெற்று நாடார்கள் செய்துவரும் வர்த்தகங்களுக்கு அனுகூலமாயிருந்தது. தேவராயர் மந்திர சித்தியிலும், வர்த்தக விர்த்தியிலும் சிறந்திருந்தபடி சிவபூசையான பத்தியிலும், திருவருட்சத்தியிலும் சிறந்திருந்ததாய்த் தெரிகிறது. இவர் வியாபார வர்க்கத்தினருடன் கலந்து பொதி யெருதுகளுடன் மேற்றிசையான பிரான்மலை நாடு, வரிசைமலைநாடு ஆகிய இடங்கள் சென்று வர்த்தகஞ்செய்து திரும்பி வருங்கால் ஆண்டிபட்டிக்குத் தென்பக்கமாய் வரிசை நாட்டு மலையிலிருந்து வரும் வைகையாற்றில் வர்த்தகக் குழாங்களிழிந்து தங்கியபோது தேவராயர் நட்டாற்றில் நீரோட்டத்தருகு சிவபூசை செய்துகொண்டிருந்தனர். திடீரென்று வெள்ளம் பெருகி ஆறு நிரம்ப வந்தன. கரையின்கணுள்ள வர்த்தக நாடார்கள் வருந்தி தேவராயரைக் காண்போமா வென்று தியங்கியிருக்கும்போது ஆற்றுநீர் வடிந்து யாதொரு தீங்கு

* அம்மையநாயக்கனூர் பேட்டையு முதன்மையான உத்தரமாற நாடார்களின் பேட்டைகளி லொன்றாகும்.

மின்றி கரைவந்து சேர்ந்தனர்; அவரது தெய்வ பக்தியை புகழ்ந்து கொண்டாடினதாகவும் கூறுவர்.

தெய்வராய நாடார் தேவி பொன்னம்மாளுடன் இல்லறம் நடத்திவருநாளில் துறவு பூண்டனர்; அதற்கு இரண்டு காரணங்கூறுகின்றனர்; சுயவறிவாகிய விவேகத்தால்சமுசார பந்தத்தை விடுத்தனரென்பது ஒன்று; தேவியார் மகப்பேறுக்குரிய கருவடைந்துழி மாதுலர் வந்து தம்மகளையழைத்துப்போகும்படி கருதினர். தேவராயர் மகப்பேறு எம்மனையிலாகலாமென்று மறுத்துவிட தேவியாரதற் கிசையாமல் 'பேதமை யென்பது மாதர்க்கணிகலம்' என்னு முதுமொழிப்படியான பேதமையாலும், மணாளன் மொழிகடந்து தந்தைமனை சென்றனள். அதனையே வெறுப்பாகக்கொண்டு துறவுபூண்டன ரென்றுஞ் சொல்வார்கள். எப்படிக் கூறியபோதிலும் 'குடும்ப பாரத்தை விவேகிகள் அடக்குங்கொள் கைபோற் பாலையைக் கடந்து' என்ற மேலோர் வாக்கியப்படியான இயற்கைத் துறவென்றே யிவரைச் சொல்லலாம். தெய்வராயர்: தெய்வராயசுவாமிகளென்னுந் திருநாமம்விளங்கச் செங்காவி யுடை யணிந்து, உருத்திராக்ஷக் கண்டிகை புனைந்து விபூதிதுலங்குந் திருமேனியினராய் கண்டவர் கரங்குவிக்கச் சிவனடியாருடன் கலந்து பலதல யாத்திரை செய்வதாயினர். பாண்டிநாடு கடந்து சோழநாடு சென்று திருவெண்ணை நல்லூரை யடைந்தனர். சமயாசிரியர்களிலொருவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரை பரமசிவம் தடுத்தாட்கொண்டதும், கம்ப நாடரை இராமாயணம் பாடும்படி

...RAJA SERFOJI'S...

செய்து சொர்டைநாயகமாய் விளங்கிய சடையப்பமுதலியார் வசித்திருந்ததுவும், இந்நகரே யாகும். கி. பி. 13-ம் நூற்றாண்டு மத்தியில் சிறந்த தெய்வஸ்தலமாகிய இதனில் மெயகண்ட தேவரென்னும் ஓர் மகானிருந்தனர். சித்தாந்த சாத்திரத்தின் மெய்ப்பொருளை வெளியிட்ட காரணத்தால் மெய்கண்டா ரென்னுந்திருநாமம் பெற்றார். இவர் பிள்ளைத் திருநாமம் சுவேதவனப்பெருமாள்; வேளாள மரபென்பர். ஞானோபதேச குருவாயுள்ளவர் பரஞ்சோதி முனிவராவர்; அருணந்தி சிவாசாரியார் தொழுதேத்தும் குருபீடமாய் விளங்கினர்; மாணாக்கராகிய அருணந்தி சிவாசாரியார் கூறிய துதிப்பாடலால் மெய்கண்டார் மேன்மை விளங்கும்.

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
　பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாற
கண்டவிரு தயகமல முகைகளெல்லாங்
　கண்டிறப்பக் காசினியில் வந்தவருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணை மேவும்
　மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்,
புண்டரீக மலர்தாழச் சிரத்தே வாழும்
　பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்.

பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்டான் சேவடியை மேவுநா ளெந்நாளோ.

என்று இப்புண்ணிய குருமூர்த்தியை தாயுமான சுவாமிகளுந் துதித்திருக்கின்றனர்; இக்குருபீட உபதேச முறை

பலவிடங்களிலும் பரவி பரம்பரையாய் வரப்பட்டதற்கு கைலாச பரம்பரை திருவெண்ணெ நல்லூர் மெய்கண்ட சந்தான மென்று பெயர். இதன் விபரம் யாதெனில்:- சிவ பெருமானருள் பெற்றோர் நந்தீஸ்வரர், அவர் சீஷர்களி லொருவர் பரஞ்சோதி முனிவர், அவரொருகால் கமனகுளி கை வன்மையால் வான்வழி தென்னாடு வரும்போது அக் குளிகை பேத காரணத்தால் திருவெண்ணெய் நல்லூரின் கண் ணிழிந்து கண்ட மெய்கண்டாருக்கு உபதேசித்தன ரென்பது சரித்திரமானதால், முறையே கைலாச கிரியில் சிவமயமான நந்தியிடத்துள்ள திருமந்திரம்பரஞ்சோதிமுனி வரிடத்திலாகி, பின்பு மெய்கண்டாரிடம் வந்து அவரால் உபதேசிக்கப்பட்ட பக்குவர்களால் பாரில் நிலவிவரப்பட்ட சிறந்த வைதீக முறையேயாகும். சந்தான மென்பதற்குப் பரம்பரை; அல்லது வழி வழி யென்பது அர்த்தம். அவ்வி யல்பான சந்தானகுரவராய் இக்காலத்திருந்த மகானை தெய் வராய சுவாமிகள் சென்று தெரிசித்தனர்; குருஸ்வாமிகள், தெய்வராய சுவாமிகள் ஒழுக்கம், கல்வி வன்மையாதிகளைக் கண்டு சந்தான முறை பரவச்செய்யும் சீஷரி லொருவராகக் கொண்டு உபதேசஞ் செய்தருளினர். சுவாமிகள் குருவ ருள்பெற்று பாண்டி நாடடைந்து பலருக்கு உபதேச குரு வாகவும், சான்றோர்களாகிய நாடார் குல குருவாகவும் விளங்கி வந்தனர். இவருபதேசம் பெற்று சீடராயினோர் சட்டநாதக் குருக்க ளென்னும் வேளாள குலதிலகரொருவ ரவர்; இவர்: அல்லது இவர் நாமம் அடைந்தவ ரென்று

நினைக்கப்பட்ட ஒருவரால் * சான்றோர் புராணம் பாடப் பட்டிருக்கின்றது.

திருமங்கல நகரத்தில் மலையப்பிள்ளை நாடா ரென்பா ரொருவர் வர்த்தக நாடார்களிற் சிறந்திருந்தனர்; அக்கால நாயக்க மன்னர் சந்திப்பும், அரண்மனைக் கொடுவாங்கலா கிய வர்த்தக விர்த்தியுளா ரென்றும், அவர் மரபினர் கூறு கின்றனர். தெய்வராயசுவாமிகளைச் சற்குருவாய்க்கொண்டு உபதேசம் பெற்று வந்தவர்களில் அவருமொருவராவர். அவர் தூண்டுதலால் சுற்றார் நாடார்கள் சிலர் சுவாமிகளைக் குலகுருவாயேற்றுப்போற்றி உபதேசம்பெற்றும் வந்தனர்; பகைஞரிம்சையால் ஒதுங்கிநிற்கும் நமக்குள் ஓர் சற்குரு இருந்துவர வேண்டுமென்பதே அக்காலத்துள்ள நாடார்க ளபிப்பிராயமாகும். பணிக்க மூத்தைய நாடார், பொன்னு

---

* சான்றோர் புராணம். கி. பி. 17.44 ல் நாஞ்சிநாடாகிய மலை நாட்டிலுள்ள நாடார்கள் பாடும்படி சொல்லப் பாடியதாகும். சான் றோர் புராணம்: புராண விதிகாச சரித்திர சம்பந்தமானதல்ல. புராண நூலாசிரியர் நூலை விரும்புபவர் எத்தொழில் செய்கின்ற னரோ! எதனை விரும்பிக் கேட்கின்றனரோ அதனைச் சிறப்பித்து நூலாதாரவின்றிக் கற்பனையாய்ப் பொருளமைத்துப் பாடுவது வழக் கம். இப்படியே வன்னியர், கம்மியர், வாணியர், தேவாங்கர் முத லியோர் செய்துகொண்ட ஜாதி நூல்களையுங் காணலாம். மதுத் தொழில் மூந்திய நூற்றாண்டுகளில் நாடார்களிடத் துள்ளதல்ல. பின்பான அரசுமாறுதல்களால் ஆனது; அத்தொழிலும், அத்தொ ழிலைப்பற்றிப் பாடியிருக்கும் அப்புராணமும் நாடார் சமூகத்திற்கு உடம்பாடானதல்லவென்பதை யுணர்வார்களாக.

லிங்க நாடா ரென்னு மிரண்டு குடும்பத்து நாடார்கள் அக்காலம் சுவாமிகளிடம் உபதேசம் பெற்றுக் கொண்டபடி அவர்கள் கால்வழியினர். சுவாமிகள் சமாதித்தலமான ஆலயத்துக்குரிய பணிவிடைகள் செய்துவருகின்றனர்; தெய்வராய சுவாமிகள் தமதில்லின் வடபுறமானவிடத்தில் திருமடமொன்றமைத்து சிஷிய வர்க்கங்களுக்கு அருள்செய்துவந்தனர். மேற்சொல்லிய சட்டநாதபிள்ளை யென்பவர் தெய்வராய சுவாமிகளின் உத்தம சீடராய் அவருடன் திருமடத்தின்கண்ணிருந்துவருவதாயினர். இப்படியிருந்துவருஞ் சற்குருவாய அப்புண்ணியர் தமது அந்தியத்தசையை தமது சோதிட சித்தாந்தத்தாலும், ஞானபோத கியானத்தாலுந் தெரிந்து கொண்டார். தான் பரிபூரண ஆனந்த சமாதியிலமருவதற்குரிய சமாதியாலயத்தையும், தன் சிஷியவர்க்க நாடார்கள் உதவியாற் செய்துமுடித்துக்கொண்டனர். அது திருமடத்திற்குத் தென்புறமாயுள்ளது. ஓர் நாள் நாட்டாண்மையோடுகூடிய திருமங்கலம் உறவின்முறை நாடார்களையும் மற்றும் பிரபலமான பிறவூர் நாடார்களையும் வரவழைத்து அவர்களுக்கருளிய உபதேச வாய்மைகளாவன:-

1. எச்சமயத்திலு மெய்ச் சமயமாகிய சைவ சமயமே உண்மையானது; அச்சமய நெறிப்படி நடந்து வருவீர்களாக.

2. குருவழிபாடில்லா ஜாதி எவ்வளவு மேன்பாடுடையதாயினும், ஆசார சீர்திருத்தத்தையடையாது ஆனது பற்றி என்றுசந்ததிகளை உபதேச குருக்களாகக்கொள்

வதுடன், அவர்களை சுபாசுபங்களுக்குரிய புரோகிதர்களாகவுங் கொண்டு நடந்து வருவீர்களாக.

தெய்வராய சுவாமிகள் மகப்பேறடையாதபடி துறவு பூண்டவரானமையால் அவர் பின் சகோதரர் புதல்வர் சொக்கலிங்கம் என்பவரையும் சிஷிய முறையிற் சிறந்த சட்டநாதர் என்பவரையும், தான் இருப்பதான குருபீடமாயிருந்துவரும்படி சமய தீக்ஷை, விசேஷ தீக்ஷை நிருவாண தீக்ஷையாகிய தீக்ஷைகள் செய்தருளி ஆசாரியபிஷேகமும் செய்துவைத்தருளினர். கி. பி. 1672-க்குச் சரியான பரிதாபி௵ கார்த்திகை௴ 1௳ பூசநக்ஷத்திரத்தன்று அகண்ட பரிபூரண சமாதியிலமர்ந்து சிவத்துடனிரண்டறக் கலந்தனர்.

### அக்காலம் அச்சுவாமிகளைக் குறித்து ஒருவர் பாடிய பாடல்கள்.

மாசிலாமணி மார்டமுண் டுனக்கு
　மங்கைமா துமை பங்கருண் டுனக்கு
கூசிமேவல் செய் சிஷருண் டுனக்கு
　குற்றமில்லதோர் குணங்களுண் டுனக்கு
எசிலாப் பொருள் யார்க்கு மெட்டாத
　இன்ப பேரின்ப வீடுமுண் டுனக்கு
தேசுலாந் திரு மங்கல மாநகர்த்
　தேவராய சுவாமி யெம் மண்ணலே.

சைவசமயந் தழைத்தோங்கத் தரணிமிசை வந்தவதரித்த
தெய்வராய தேசிகனே திருமங்கலத்துக் கொருமுதலே
பைவாயரவ விடந்தீர்க்கும் பரமகுருவே பத்திநெறி
மெய்நின் றொழுகுஞ் சிவஞான விளக்கேபோத விழுப்பொ-
[ருளே.

மடந்தரு மாது மகவுபொன் பூமி
மயக்கெனு மிருட் டிரை நீக்கித்
தொடர்ந்தநல் வினையாந் துணையுடன் றனித்துச்
சுயம்பிர காசமாஞ் சோதி
நடம்புரி செயலை யகக்கணா னோக்கி
நானெனுந் தன்மையு மறந்து
கடந்துபூ வியல்பைப் பிரமமாய் யாவுங்
காண்பவன் பெருமையா ருரைப்பார்.

## 2-வது சொக்கலிங்க சுவாமிக் குருக்கள்.

தெய்வராய சுவாமிகளால் குருவபிஷேகம் செய்து வைக்கப்பட்ட சொக்கலிங்கசுவாமிக்குருக்கள், சட்டநாதக் குருக்கள் என்பவர்களும் அவர்கள் சந்ததிகளும், சேர சோழ பாண்டிய ராச்சியங்களிலுள்ள நாடார்களுக்கு உபதேச குருக்களாகவும், சுபாசுபங்களிற் கிரியைகள் செய்து வரும் புரோகிதர்களாகவும் விளங்கி வந்தனர். தெய்வராய சுவாமிகள் சமாதியிலமர்ந்த பிரதம காலத்தில் திருமங்கல

நாடார்களும், மற்றவர்களும், சுவாமிகள் மகிமையையும் அற்புத சித்தியையுங் கண்டிருப்பவரானதால் சமாதித்தலத்தை ஆலயமாக்கி லிங்கப்பிரதிஷ்டை செய்து தத்தம் தொழிற்பொருள்களான ஆநெய், எண்ணெய், வெற்றிலை, பாக்கு ஆடை முதலியவைகள் சமர்ப்பித்தும், சர்க்கரைப்பொங்கல் வைத்தும் வணங்கி வந்தனர். ஈஸ்டிண்டியா கம்பெனியார் மதுரைச் சீமையைக் கைக்கொண்டு ஆயக்கட்டு நடத்திய 1212-ம் பசலியில் திருமங்கல ஆயக்கட்டுக் கணக்கில் ஞானியார் மடத்தைச் சார்ந்த கர்லிநிலம் கா லுங் கால் மாகாணிச் சக்கிலி நிலமென்று கண்டிருக்கிறது.

தெய்வராய சுவாமிகள் அருட் சீஷராகிய சொக்கலிங்கக் குருக்கள் புலால் மறுத்து சைவப் பற்றுடையோராகிய நாடாரொருவர் பெண் கொண்டு இல்லற வாசியாய் குரு முறைக் காரியங்களை நடத்தி வந்தனர். மேற் சொல்லிய மலையப்பிள்ளை நாடார் சுவாமிகள் நேசபாசரா யிருந்தபடியிவரிடமுமிருந்து வந்தனர். இதற்குள் திருமலை நாயக்கராஜியல் 1654-ல் முடிந்து அவர்பின்னோரான முத்துவீரப்ப நாயக்கர், ரெங்க கிருஷ்ணப்ப நாயக்கர் அரசியல்காலம் 30 வருடங்கள் கடந்து 1690-க்குப் பின்னுன மங்கம்மாள் அரசியல் காலம்வந்தது. ராணிமங்கம்மாள் குடிகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்துகொடுப்பவரானதால் வியாபாரத் துறையில் நின்ற நாடார்களுக்கும் வியாபார விர்த்தியாவதற்குரிய சாதனங்களும் செய்து கொடுத்திருந்தனர்; மலை

யப் பிள்ளை நாடார் அரசியார் செய்து கொடுத்த சௌகரியங்களாலும், பக்ஷத்தாலும் தங்களுக்குத் தலைமையாய் விளங்கிய ஆறூர் நாடாருறவின்முறை மகமை யாதாயங்களைக் கொண்டு திருப்பரங்குன்றத் தமர்ந்தருளிய தேவாதி தேவன் சேவற்கொடியான் செழுங்கருணைவாரிதி வழிவழியாட்கொண்ட அப்பன் ஆறுமுகக்கடவுள் திருவாலய ஆஸ்தானமண்டபமும், அணியொட்டிக்கால் மண்டபமுமான திருப்பணிகள் செய்தனர்.

## திருப்பரங்குன்றம்.

இது சுப்பிரமணியக்கடவுள் ஆறுபடைவீடுகளில் ஒன்றாயுள்ளது. பூர்வம் நற்கீரர், அருணகிரி முதலிய அருட்கவிகளாற் பாடப்பெற்றதாகும். பரம்பரையாய்ப் பாண்டிய ராதீனத்திலிருந்து வந்திருக்கின்றது. சிக்கந்தர் சாயபு ஸமாதித்தலமொன்று மலைமேலிருக்கின்றது. இவர் கி-பி 1162-ல் பாண்டி நாட்டின்மீது படையெடுத்துவந்த செய்யதிபுறூஹிம் என்னும் அரபிநாட்டு மன்னருடைய உபபலவீரர்.

கலிநாலா யிரத்திருநூ றுடன்பத்தா றுயக்
கழறுமாண் டரசரெலாங் கரங்கள் கூப்ப
வலியுடனே விக்கிரம வழுதி யென்போன்
மாநிலத்தை யாண்டிருக்க வடமே ருட்டிற்
புலியனையா ரரபியர்கள் வங்க மீது
புணரிகடந் தளிவரை நன்றுடு நீங்கி

ஒலிகெழும் வைப்பாறருகி விறுத்தா ரேவு
மொற்றர்களாற் பாண்டியனு முணர்ந்தான்மாதோ.

கொற்கைப் பாண்டியனுக்கும், மேற்படி சாயபுக்கும் மிக்க கோரமான யுத்தம் நேர்ந்தபோது மதுரைத் திருப் பாண்டியன் துணைப்பலம் வேண்டி வடபுலம்புக்கான் மகம் மதியரால் ஜெயிக்கப்பட்ட பாண்டிராஜ்யம் துலுக்காணமா யிற்று. மதுரை சிக்கந்தர் ஆண்டார் 12-வருடங்களுக்குப் பின் திருப்பாண்டியன் ஐந்து லட்சம் தெலுங்க வீரர்களு டன் வந்தபோது சிக்கந்தர் திருப்பரங்குன்றஞ் சென்று அஞ்சி பக்கீறு கோலமாயிருந்து அந்தமாயினர். பின் மகம் மதியர் அவர்பேரால் ஓர் பள்ளி கட்டியிருக்கின்றனர். திருப் பாண்டியனால் செய்யதிபுரு ஹிம் ஜெயிக்கப்பட்டு தமிழ்நாடு பழையபடி பாண்டிராஜ்யமானது. பாண்டியமரபினர் திருப் பரங்குன்றத் தேவாலய சேவையுரிமை செய்துவந்திருக்கும் வழக்கத்தை யுத்தேசித்து மலையப்பிள்ளை நாடார் ராணிமங் கம்மாள் அனுமதி பெற்று மேற்சொல்லியபடியான திருப் பணிகள் செய்திருக்கின்றனர். சொக்கலிங்கக் குருக்களும் இப்பணியாதிகட்குச் சகாயமாயிருந்து வந்தனர். சொக்க லிங்கக் குருக்களுக்கும், சட்டநாதக் குருக்களுக்கும் நாடார்களிடம் செய்துவரும் கிரீயை விஷயகாரணமாக உலோகானுபவப்படி விரோத வுணர்ச்சியுமுண்டும். தேவ ராய சுவாமிகள் சிவவந்தரரியிருக்கு நாளில் சட்டநாதக் குருக்கள் சுவாமிகள் தம் தம்பி புதல்வரிடம் பக்ஷமாயிருக் கிறாரென்னும் அழுக்காறு கொண்டு சுவாமிகளை விருந்துக்

கழைப்பார் போலழைத்து வந்து விடமிட்ட வன்னத்தைப் படைக்க அவர் தமது சுய ஞானத்தால்த் தெரிந்து வழக்கம்போல் வந்து நிற்கும் பூனைமுன் ஓர் பிடியன்னத்தை வைத்தனர். அது அதனை யருந்தி மடிந்தது சிஷராகிய குருக்கள் தெரிந்து செய்த கைதவத்தை யெண்ணிருக்கும்படி பன்முறை தாழ்ந்து வேண்ட கருணாநிதியான சுவாமிகள் அதனையோர் பொருட் படுத்தாது தயாளசித்தமாயிருந்து வந்தனரென்றுங் கூறுவர். இவ்வியல்புப்படி பிரிந்த சொக்கலிங்கக் குருக்கள் சட்டநாதக் குருக்கள் ஆகிய இருமர பிடத்தும் நாடார் சமூகம் மேற்சொல்லியபடி உபதேச முறைகள் பெற்று வந்தன.

2-வது சொக்கலிங்கக் குருக்கள் அவர் புதல்வர் 3-வது ராமலிங்க ஸ்வாமிக் குருக்கள் காலங்கள் கடந்து 4-வது நடராஜ சுவாமிக் குருக்கள் 5-வது மதுரை விநாயகக் குருக்கள் ஆகிய இவர்கள் காலத்தில் ஓர்சம்பவம் நடந்தது

## மைசூரார் கொள்ளை.

முன் சொல்லிவந்தபடியான மங்கம்மாள் விஜயரெங்க சொக்கநாத நாயக்கர், மீனாக்ஷியம்மாள் ஆகிய இவர்கள் அரசியல் நீங்கி கி. பி. 1691-க்குமேல் சுமார் 50-வருடங்களுக்குப்பின் நாயக்கர்களரசாக்ஷி பூராவெடுபட்டு மதுரைச் சீமை ஆர்க்காட்டு நபாபு பிரதிநிதிகளாலும். உள்நாட்டார் செய்யும் விரோதங்களாலும் சீர்குலையலாயின. அதுசமயம் மைசூர் ஐதர்படை வீரர் மயாணமைகதிமீட்டா நபிகான்

என்பவர்கள், மதுரையில் வந்து ஆங்குள்ள ஆர்க்காட்டு நபாபு தளவாய்களையும், ஸேதுபதி தளவாய் வெள்ளையன் சேருவையையும் வென்று மதுரைப் பூமியையும் தம்வசப் படுத்தி கொள்ளையிட்டனர். இவர்களால் மதுரையும், மதுரையைச் சூழ்ந்துள்ள ஊர்களும் கொள்ளையிடப்பட்டன. இது நடந்தது கி. பி. 1740. 45-ஆகிய வருடங்கள். அக்காலம் பாண்டி ராஜ்யம் துலுக்காணமாயிற்று. இக்கொள்ளைக்கூட்டங்கண்ட பாண்டிநாட்டிலுள்ளார் ஓர் மிகுதிக் கூட்டங்கண்டவுடன் இது மைசூரான்படையோ வென்று பழமொழி கூறுவதாயினர். அம்மொழி இன்றும் வழங்கி வருகின்றது. மதுரைக்கோட்டையை மைசூருக்குக் கிரையஞ் செய்ததாகவுஞ் சரித்திரமிருக்கின்றது. அக்கொள்ளையிலகப்பட்ட திருமங்கல நாடார்கள் தலைக்கட்டு ஆறுயிரமாயிருந்தது. சிதைந்துபோனதாக யூகிக்கப்படுகின்றது. அக்காலம் நமது குருக்கள் குடும்பம் திருமங்கலத்திருந்து சிவகாசி சென்றது அப்படிச் சென்றது. 5-வதாகிய மதுரை விநாயகக்குருக்கள் காலம்.

## சிவகாசி அய்ய நாடார்.

மதுரை வட்டகையில் மைசூர் கொள்ளை நடந்தது. (கி. பி. 1745) அதன்பின் ஆற்காட்டு நபாபின் பிரதிநிதிகளான மாபோஸிகான் சாய்பு மம்மதலிகான் சாய்பு அப்துல்லா குமுகான் சாய்பு கூ கூ சாய்பு முதலிய நபாபுவர்க்கவீரர்கள் வந்து மதுரையிலிருந்து மதுரை திருநெல்வேலி சீமைக் கிராமங்கள் பலவற்றையும் வரித்தொல்லைக்குளாக்கி

னிர்ப்பந்தஞ் செய்து வந்தனர். சுமார் 10—வருஷங்களாக ஜனங்கள் வெகுவாய் வருந்தினர். அக்காலம் சிவகாசியில் தெப்பக்குளங்கட்டிய செண்பகக்குட்டி நாடார் மரபில் அய்யநாடாரென்பா ரொருவரிருந்தனர். அவர் அந்நகரில் செல்வாக்குடைய நல்ல செல்வவந்தரா யிருந்து வந்தனர்.

அவர் திருமங்கலமிருந்து வந்த மதுரை விநாயகக் குருக்களை வாஞ்சையுடன் வரவேற்று ஆதரித்து வந்தனர். குருக்களும் அவ்விடம் திருமணை பெடுத்து இல்லறவியல்பி லிருந்து சிஷ்யாகிய நாடார்வர்க்கத்தினருக்கு உபதேச முறைகளையருளி வசித்திருந்தனர். முன்சொல்லியபடி மதுரை நபாபுக்கள் வரித்தண்டல் ஆங்கும் வந்து உத்தி யோகர்கள் ஜனங்களை வெகுவாய்க் கஷ்டப்படுத்தியும் வசூல்வேலை முடியாதிருந்தது. அதனால் அவ்வுத்தியோகர் அவ்வூரில் சிறந்து விளங்கிய அய்யநாடார் தந் தையைப் பிடித்துக் கொண்டுபோய் மதுரைச் சிறைச்சாலை யில் வைத்தனர். வாலிபதசையாயிருந்த அய்யநாடார் வருந்தி மதுரை விநாயகக்குருக்களுடன் ஆலோசனை செய் து தந்தையை மீட்டும்படியான தகுந்தயுக்தியுடன் மதுரை சென்று நபாபின் மோகஸ்திரீயிடம் புத்திரமரியாதையான நட்பால் அவர் தயவைப் பெற்று அதன் மூலமாய் நபாபு பேட்டிகண்டு வரிவசூல் செய்து தருகிறேனென்பதாக உறுதி கூறி தந்தையை மீட்டி அந்நபாபு அபிமானித்துத் தந்த வாம்பரியொன்றிலமர்ந்து தந்தையுடன் இன்னும்

அவன் தந்த நூறு வீரர்களடங்கிய ஒருசிறுபடையுஞ் சில விருதும் பெற்று சிவகாசி வந்து சேர்ந்தனர்.

ஜனங்களிடம் வரிவசூல் வேலையும் ஆரம்பித்தது. குருக்கள் யோசனைப்படி நாடார் ஜனங்களை பத்திரகாளியம்மன் கோவிலுக்குள் அடைத்து வசூலிக்கப்பட்டது. மற்றவர்களை ஆங்காங்கே தெருக்களிலும் மற்றிடங்களிலும் நிறுத்தி வசூலித்தனர். பொருள் வசூலினுள்ள திறமையைக்கண்டு துரைத்தனத்தார் மதிக்கும்படி சிவகாசி அப்பநாடார் சிறந்திருந்தனர்.

மதுரை விநாயகக் குருக்கள் புதல்வர் கனகசபைக் குருக்கள் குருவபிஷேகம் பெற்றார். அவர் சிவகாசியிலிருக்கும்போது முன்சொல்லிபபடியான வரிவசூல் பலமாகவர அரசாக்கினைப்படி செய்து வருகிற அப்பநாடார் நிர்ப்பந்தத்துக்காக அஞ்சி சிவகாசியிலுள்ள ஜனங்கள் நாலாபக்கமுஞ் செல்லலாயினர். அப்படிக்குடிபேருஞ் சனங்களுடன் நமது குருக்கள் குலமுங் குடிபெயர்ந்து ஒண்டிப்புலிநாயக்கனூர் வந்தனர்.

## ஒண்டிப்புலிநாயக்கனூர்.

இந்நகர் விருதுநகருக்குத் தெற்கே 6—மைல் தூரத்திலுள்ளது. அவருடன் குடிபெயர்ந்து ஒண்டிப்புலிநாயக்கனூர் வந்த நாடார் ஜனங்கள் சுமார் ஆயிரம்பேர் இருக்கலாமென்று கூறுகின்றனர். ஒண்டிப்புலிநாயக்க ரென்னும் பாளையக்காரர் வந்த ஜனங்களையாதரித்தனர். ஜனங்களு-

டன் கூடிவந்த கனகசபைக் குருக்களை பாளையக்காரர் மரியாதையாய் வரவேற்று அவர் வசிக்கும்படியான மனை நிலங்களும் மற்றுளதுங் கொடுத்து உபசரித்தனர். 6-வது கனகசபை குருக்களாகிய அவர் புதல்வர் 7-வது அம்பலவாணக் குருக்கள் அவர் புதல்வர் 8-வது மதுரைவிநாயகக் குருக்கள் அவர் புதல்வர் 9-வதாகிய சதுர்வேத ஞானக் குருக்கள்

இவர் தம் இளவயதில் தமிழ்க்கலை பலவும் பயின்று முறையே சோதிடம் வேதாந்த சித்தாந்த சாஸ்திரம் முதலியவுங் கற்று ஜனங்களால் புகழ்ந்து கொண்டாடி வரப்பட்டவராயிருந்து வந்தனர். அவராலெழுதிவைக்கப்பட்ட எட்டுப்பிரதிகள் பலவுள. ஒண்டிப்புலி நாயக்கனூரில், இருந்துள்ள நாடார்களிடம் மகமை வரிவசூல் செய்து பொதுவிஷயமான காரியங்களையும் பார்த்து வந்ததுடன் பாளையகாரரிடஞ்சென்று பஞ்சாங்க முதலிய சோதிடமுஞ் சொல்லி அவர் சித்த மகிழும்படி நடந்து வந்தவராகவும் தெரிகிறது.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அதிர்மேகம் பொழியவளம் பெருகுபுவி யரசரெலாம்
அன்பு கூற
முதிர்ஞானப் பிரகாச் சோபிதமாய் வீற்றிருக்கு
முதல்வன் போற்றும்

கதிர்போன்ற தேசுடையான் சான்றோர்கள் சற்குரு-
கண்ட கோமான் [வாய்க்
சதுர்வேத ஞானகுரு தேசிகனே தமிழ்நாட்டில்
தழைத்த போதம்.

இக் குருதேசிகர் சமாதியாலயம் ஒண்டிப் புலியூரில் நல்லவெல்லப்பா டுடையதா யமைந்திருக்கின்றது.

நாடார்களல்லாத மற்றவர்கள் பிரபலமாயிருந்த அவ்வூரில் இவ்வித சமாதியாலய மமைந்திருப்பதைக் கொண்டு அவர் மகிமையைப் பலவாறு வியந்து பேசக்கூடியவர்களாயிருக்கிறோம். அவர் சமாதியான வருட விபரம்: கையெழுத்து ஏட்டுப்பிரதியிலுள்ளன வருமாறு:-

சத்திவிநாயகக் குருதேசிகன் கைலாயத்துக்கு எழுந்தருளியானது (கி. பி. 1762.) சித்திரபானுவருஷ தை மாதம் அமரபக்ஷம் ஞாயிற்றுக்கிழமை உத்திர நக்ஷத்திரம் இரவு உ௰அ-நாழிகை மகரலக்கினம் ஒண்டிப்புலியூரில் திங்கட்கிழமை சமாதி செய்யப்பட்டது.

(கி. பி. 1782.) சோபகிருதுவருஷ லிங்கப்பிரதிஷ்டையானது இத்திருப்பணிக்கும் இனிமேற் செய்வதாகிய விநாயகராலயத் திருப்பணிக்கும், சதுர்வேதஞானக் குருக்கள் குமாரர் சோக்கநாதக் குருக்கள் அவர்களுக்கு ஒண்டிப்புலி நாயக்கனூர் நாடாருறவின் முறையாரிடம் (கி. பி. 1784.) விசுவாவசுவருஷ மகமைவரீ வசூலித்த விபரம் கையேட்டுப் பிரதியிலுள்ளது: ஒன்றிப்புலி உறவின் முறையாரனைவோர்

ரும் மகமை வைத்துக்கொடுத்தது; கச்சைப்பொதி, வேர்ப்பொதி, நால்ப்பொதி, கெம்புப் பொதி, புகையிலை தென்-பொதி, பஞ்சு தென்பொதி, சவளிப்பொதி இந்த வகைக்கு பொதி க-க்கு பணம் க. பாக்கு, மிளகு, பஞ்சு சின்னப்பொதி, பலசரக்கு, மண்வெட்டி, கொழு இந்த வகைக்கு பொதி க-க்கு பணம் 𑿑. (அரை) பருத்திப்பொதி, எள்ளுப்பொதி இந்த வகைக்குப் பொதி க-க்கு பணம் வ. (கால்) —— பொதி, முத்துப்பொதி, பயறு பொதி, வெற்றிலை. நார்த்தங்காய், மிளகாய் மற்ற வகைக்கெல்லாம் பொதி க-க்கு ——. திருப்பணி நடக்கிறவரை கொடுப்போம் யாராமொருவன் இடையூறு பண்ணினவன், மாதா பிதாவைப்பழித்து, தெய்வத்தையிகழ்ந்து, கெங்கைக்கரையிலே காராம்பசுவைக் கொன்ற பாவத்திலே போவானாகவும்.

இந்தப்படிக்கு: சொக்கலிங்கமீனாட்சி அம்மாள் துணை.

பெரியதம்பிராடான், பெரியமுத்து, மதுரைவிநாயகம்,
முத்துக்கறுப்பன், பாண்டி, அண்ணாமலை, கந்தசாமி.

இம்மகமைநிதியால் (கி.பி. 1786) பிலவங்க௵ மார்கழிமீ உ௰௯உ செவ்வாய்க்கிழமை அபரபக்ஷம் ஏகாதசி சுவாதி நக்ஷத்திரம் உதித்து ந-ஜ. மூன்றரை நாழிகை அளவு தனுசு லக்கனம் ஆகிய சுபதினத்தில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்தது. இவ்வித திருப்பணியாதிகள் நடாத்திவந்த சொக்கநாதக் குருக்கள் சிவகாசி சென்ற சமயம் (கி. பி.-1805) அட்சய௵ ஆவணிமீ உ௰எஉ வெள்ளிக்கிழமை

அமரபக்ஷம் தசமி திருவாதிரை நக்ஷத்திரம் இரவு நெடு-நாழிகை சமாதிநிலை யடைந்தார். அச்சமாதி சிவகாசியி லுள்ளதென்பர். ஒண்டிப்புலியூரில் அரும்பெரும்பணிகள் செய்து சிவகாசியில் அந்தமான 10-வது சொக்கநாதக்குருக்கள் புதல்வர் 11-வது மதுரை விநாயகக் குருக்கள் இவர் காலத்தில் ஒண்டிப்புலி நாயக்கராகிய பாளையக்காரருக்கும், மற்றொரு பாளையப்பட்டுக்கும் யுத்தம் நடந்து பாளையக்காரர் மடிந்து எதிரிகளால் ஊர் கொள்ளையிடப்பட்டன. அப்போது ஜனங்கள் குடிபெயர்ந்தபடி குருக்கள் குடும்பமுங் குடிபெயர்ந்து குல்லூர்ச்சந்தை யென்னும் சிற்றூரில் வந்திருந்து மதுரைவிநாயகக்குருக்கள் புதல்வர் 12-வது இராமலிங்கக்குருக்கள் காலத்தில் விருதுநகர் வந்தமர்ந்தனர்: ஆங்கிலவரசர்களாகிய கம்பெனியார் அரசியலும்வந்தூன்றியது.

அடித்தவர்க்குத் தொண்டாகிப் பிடித்தவர்க்குப்பெண்டாகி
யநேகஞ்காலம்
வடித்தகண்ணீர் சமுத்திரமாந் துயரடைந்த இந்தியாவின்
வரட்டந்தீரக்
கெடித்தலத்திற் கோட்டைகட்டி வேட்டெழுப்பிப் பகை-
யொதுக்கிக் கிரீடம்பூண்டு
குடித்தனத்தார் வாழவரசாள்வதெல்லா மாங்கிலக்கோ
லொன்றுலன்றோ.

துலையேந்த வந்துதனிக் கோலேந்தித்
துரைத்தனமாய்

### அலையேந்துங் கடற்புவன மாங்கிலக்கூட்டாள்காலம்.

அதாவது, துலாக்கோலேந்துதலாகிய வர்த்தக முறையில்வந்த ஆங்கிலர் செங்கோலேந்தி இந்தியாவில் அரசாட்சி செய்யத் தொடங்கிய அக்காலம் 12-வது குருக்களாகிய இராமலிங்கக் குருக்கள் விருதுநகர் வந்தனர்; அவர் வருங்கால் விருதுநகர் ஓர் சிற்றூராயிருப்பினும் பழங்குடிகளாக நாடார்கள் சிலரிருந்து வந்தனர். கோட்டைப்பட்டி முத்துராமன்பட்டி என்னும் இரு சிறு ஜமீன்களிருந்தன; ஜமீன்தார் நாயக்கர்களாவர்; கோட்டைபபட்டி ஜமீன்தார் பூதம் பாப்பு நாயக்கர் குருக்கள் பிரஸ்தாபத்தைக் கேட்டிருந்தவரான்படியால் அவர்வரவை மரியாதையாயேற்று உபசரித்து இப்போது 12-வது இராமலிங்கக் குருக்கள் பேரர் புதல்வர் **15-வது இராமலிங்கக்குருக்கள்** வசித்துவருகிற வீட்டு நிலத்தை சன்மானமாகக் கொடுத்தனர். குருக்கள் அந்நிலத்தில் இல்லம் அமைத்து "விருதுநகர் நாடார்களுக்கும் சுற்றூர் நாடார்களுக்கும் உபதேசம் முதலியவைகள் செய்து வந்தனர்." இராமலிங்கக் குருக்கள் புதல்வர் 13-வது **பழனிக்குமாரக் குருக்கள்** சகோதரர் இராமலிங்கக் குருக்கள், சொக்கநாதக் குருக்களாகிய இருவர்; இவர்கள் திருமங்கல நாடார்கள் வேண்டுகோட்படி திருமங்கலஞ்சென்று தெய்வராயசுவாமிகள் திருமடாலயச்சார்பான தப இடங்களிலில்லமைத்து வசித்துவந்தனர். அவர்களில் இராமலிங்கக் குருக்கள சந்ததிகள் அவ்விடமிருந்து வருகின்றன.

## பொன்னம்பலக் குருக்கள்

மேற்சொன்னபடியான 13-வதுபழனிக்குமாருக்குருக்கள் அருந்தவப் புதல்வர் பொன்னம்பலக் குருக்களாவர்; இச்சைவலக்ஷணக்குருக்களால் 'கைலாச பரம்பரை திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டசந்தானம் தெய்வராயதேசிக சுவாமிகளாதீன' மென்னுங்குருபீடம் சிறந்துவிளங்கியது. பொன்னம்பலக்குருக்களானவர் கி.பி. 1823-ல் ஜெனனமாயினர். திவ்ய சைவ லக்ஷணமாய் பொன்னம்பலநாதன் கருணையினால் வளர்ந்துவரும் நமது பொன்னம்பலம் பாலப்பருவத்தில் தந்தையாகிய பழனிக்குமாருக் குருக்களிடம் தமிழ்க் கலையாதிகள் பயின்று வருவதாயினர்; வாலைப்பருவமடைந்துழி விருதுநகருக் கடுத்த பாலவனத்தம் குற்றாலஞானியாரென்னும் ஓர் சைவ நாடார் திருப்புதல்வி துணைமாலையம்மாளை திருமணமுடிக்கப்பெற்றார். முன் சொல்லி வந்தபடி உரிமையான வுபதேசம் சுபாசுபங்களிற் செய்து வரும் கிரியையாதிகள் இவரால் நாடார்களிடம் செவ்வனே நடைபெற்றன. விருதுநகர் நாடார்களும் வேண்டிய உதவிகள் செய்துவந்தனர்.

பொன்னம்பல சுவாமிகள் தம்முன்னோர் வழக்கம்போல் திருமங்கலத்தில் தெய்வராய சுவாமிகள் சந்நிதானத்தின்கண் குருவபிஷேகஞ் செய்யப்பட்டார். திருமங்கல நாடார்களாலும், விருதுநகர் நாடார்களாலும் அபிஷேக கிரியை மிகு விமரிசையாய் நடத்தப்பட்டது. குருவபிஷேக

கித்தின்று ஆறூர் உறவின்முறை நாடார்கள்வந்தனர். பாலையம்பட்டி நாடார்கள் தங்கத்தாலாகிய பூணூலொன்றும்; நல்லையம்பதியென்ற அருப்புக்கோட்டை நாடார்கள் ஆறுகட்டியென்ற சிறந்தகர்தணியும், கௌரிசங்கரமணியென்று வழங்கும் உருத்திராக்ககண்டிகையும்; திருமங்கலம், சாத்தங்குடி நாடார்கள் ரத்தினக்கம்பளம்; பட்டு வஸ்திராதிகளும், விருதுநகர் சிவகாசி நாடார்கள் செலவு வகைக்குரிய நிதிகளும் சில பொருள்களும் குருஸ்வாமியவர்கள் சந்நிதியில் வைத்து வணங்கி மங்களாசீர்வாதம் பெற்றனர்.

இது நடந்தது கி. பி. 1853 ஆகும் இவர் திருப்புதல்வர் "சுப்பயக் குருக்கள், பழனிக்குமாருக் குருக்கள், இராமலிங்கக் குருக்கள், பழனியம்மாள், புன்னையம்மாள், சின்னம்மா ளென்ற சங்கராவுடையம்மாள் ஆகிய குமாரத்திகளு மிருந்தனர்; கூரைக் கட்டுடையதாயிருந்த தமது இல்லத்தைக் காரைக் கட்டிடமான கெட்டியில்லமாக சுமார் 5000 ஐயாயிர ரூபாய் செலவில் செய்துமுடித்தார்: தம் வீட்டுக்கு மேல்பக்கமான வீதியில் மூன்று கடைகளுங்கட்டி வாடகை வரவாசியில்வைத்தனர். தமது சிரேஷ்ட குமாரர் சுப்பயக் குருக்கள்: அவர் குமாரர் குமரய்யாக் குருக்க ளென்ற பழனிக்குமாருக் குருக்கள் அவர் தமது மாமியார் பழனியம்மாள் புதல்வி சின்னம்மா ளென்ற சங்கராவுடையம்மாளை மணமுடித்தனர். அவர்கள் திருப்புதல்வி சிறந்தமாதுசிரோன்மணியான தில்லையம்மாள்

முன்சொன்ன சுப்பயக் குருக்களானவர் வழிவழி குருவபி ஷேகப்பட்டத்துக் குடையவராயிருந்தும், 18-வது வயதில் விவாக முடிப்பெற்று 28 வயதாகிய விக்கிரம௵ கி. பி. 1880-ல் அந்தமடைந்து விட்டபடியால் பட்டம்பெறுவதற் கின்றி அவர் குமாரர் குமரய்யா குருக்களென்ற பழனிக் குமாருக் குருக்கள் கி. பி. 1893. விஜய௵ விவாகமுடிக் கப்பெற்று அபிஷேகமும்பெற்றார். இவரே பரம்பரைப்படி 15-வது குருக்களாவர். அபிஷேகஞ் செய்து வைத்தவர் பொன்னம்பலக் குருக்களேயாவர்

பொன்னம்பலக் குருக்கள் விருதுநகரில் ஸமஸ்த வரு ணத்தினருங் கொண்டாட வெகு நாளில் திரிசிரபுரத்தின் கண் வசித்துவருபவரும் மயூர புராணம், நாகைப் புராண முதலிய ஸ்தல நூல்களின் நூலாசிரியரானவரும்; நீதிநூல், சர்வசமய சமரஸக் கீர்த்தனை முதலிய உலோகோபகார நூல்களியற்றிப் புகழ்பெற்ற வேதநாயகம் பிள்ளை யாப்த நண்பருமான மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை யவர்கள் இத்தென்னாடுவந்துழி விருதுநகரடைந்து பொன் னம்பலக் குருக்களின் பூரண சிவபக்தி யொழுக்க முதலி யவைகளைக்கண்டு வியந்து நட்புரிமை கொண்டு அவர்மீது பாடிய பாடல்.

ஆசிரிய விருத்தம்.

கானில மதிற்றரும மேயிரவலர்க்கெலாம்
வைகலும் புரிசெல் வமும்

மாசற்ற சீலமுங் குருமொழி வழாமையு
மாதேவர் மீதி லன்பும்
மேனிலத் தோர்கள்புகழ் சாந்தமே குடிகொண்டு
விருதுபட் டிக்கண வாழும்
விஸ்தார வியாபார நாடார்கள் சென்னிமேல்
மேவுமல ரடிசூடி னேன்
தேனுலா மதுரமலி நீதிசேர் வாக்கினேன்
செகராஜர் பணிவாய்மை யோன்
தினகரன தொளியினைப் பரவுபுகழ் திசையெலாஞ்
சென்றுநிலை நின்ற தவவான்
தீனர்கள் தயாபரனு மானமறை நெறிவழாத்
தெய்வமென லாந் தன்மையோன்
செய்யபொன் னம்பலக் குருபரன் பேர்சொன்ன
சென்மமீ டேறு மாதோ.

பொன்னம்பலக்குருக்கள் சிறந்த சாதுவானவர்; சைவாகமங்களிலுள்ள முறை சிறிதுந் தவறாதோர்; சைவாசாரமான ஐதீகம் அவரிடம் பூரணமாயிருந்தது. தூய்ய வெண்டுகிலும், சிரவட்டமான உருத்திராக்கமும், மார்பில் விளங்கும் தங்கப் பூணூலும், உருத்திராக்கக் கௌரிசங்கமும் விபூதிமயமாய் விளங்கும் விமலமேனியுள்ளவராய் வீதியிற் காணப்படுவார். சதாவும் புராண காலக்ஷேபங்களே திருமனையில் நடைபெறும். காலக்ஷேப புராணங்களில் "மாக புராணம்" விசேஷமாய்ப் பாராயணஞ் செய்து வரப்படும்.

வருடா வருடம் மகரரவி வளர்பிறைப் பிரதமையில் ஆரம்பித்து கும்பரவி வளர்பிறைப் பிரதமையில் பூர்த்தியாகும். புராண பாராயணந்துவக்க முதல் மாகஸ்நானம் செய்து விரதமிருந்து நூற்றுக்கணக்கான சிஷ்யவர்க்கங்கள் வணக்கத்துடனிருந்து கேட்க புராண பாராயணம் நடைபெறும். மேற்படி புராணம் 10-வது சொக்கநாதக் குருக்களால் எழுதப்பெற்று ஏட்டுப்பிரதியாய் இன்றுமுளது. வாழ்க்கைத் துணையான "துணைமாலையம்மாளும்" கணவனுக்கான பணிவிடைகளையன்புடன்செய்துவரலாயினர்; இப்படியாயிருந்து சகலருக்கும் மங்களாசீர்வாதஞ் செய்துவந்தருளிய பொன்னம்பல சுவாமிக ளென்னும் "பொன்னம்பலக் குருக்கள்" தமது 73-ம் வயதில் கி. பி. 1896. துன்முகிவரு வைகாசி மீ 25உ சிவபெருமான் திருவடி நீழலடைந்தனர். அவர் பிரிவாற்றாமையான சரமகவிகள் பல வித்துவான்கள் பாடியிருக்கின்றனர். விருதுநகர் சங்கீத சாகித்ய வித்வான் அ. கந்தசாமிக் கவிராயர் தாம் பாடிய "ஏறல்சேர்மன் அருணாசலசுவாமி அம்மானை" யில் குரு ஸ்துதியாக,

> பொங்குபுகழ் தென்விருதைப் பொன்னம்பலக் குருவின்
> செங்கமலப் பாதந் தினந்தோறும் போற்றிசெய்வேன்,

என்றும்; இன்னும் இக் குருதேசிகரின் திருக்குமாரர் ஸ்ரீமான் இராமலிங்கக் குருக்கள் தாம் பாடிய "திருத்தாலாட்டு" என்னும் நூலில்,

தென்னர் குருவாசாரி தேசிகபொன் னம்பலவன்
தன்னருளினாலேயென்னையாநீ தாரணியில் வந்த கண்ணே.
என்றும் பாடியிருக்கின்றனர்.

இன்னும் நமது பொன்னம்பலக் குருக்கள் விருதுநகர் நாடார் சமூகத்திற்குச் செய்துவந்த நன்மைகள் பலவுள. 1866-ல் தெப்பம் வெட்டப்பட்டு செப்பனிடப்பட்டன. அத்தெப்பம் உண்டு செய்வதற்கு சுபமங்களமான நாட் சொல்லி முகூர்த்தஞ் செய்தவர் பொன்னம்பலக்குருக்களையாவர். அக்காலம் சப்-மாஸ்திரெட்டாகவும், சப்-ரிஜிஸ்டாராகவும், விருதுநகரிலிருந்து வேலைபார்த்து வந்த சரவணமுத்துப்பிள்ளை யென்பார். இந்நகர் நாடார்கள் மேற்படி தெப்பக்குளம் அமைப்பதற்கு தூண்டுகோலாகவும், குருக்களவர்களுக்கு மிக்க நண்பினராகவுமிருந்து வந்தனரென்றும், சொல்லப்படுகின்றது.

1866-ல் நிகழ்ந்த அட்சய௵ இத்தென்னாட்டில்
ஊட்டிய வனைபிதா வுறக்கம் நீத்தபின்
வீட்டினிற் காண்கிலம் சென்று மீண்டிலர்
வாட்டின பசிப்பிணி யென்று மைந்தர்கை
நீட்டியங் கயல்மனை நிற்குங் காலமே.

என்று சொல்லும்படியான சாமகாலம் நேரிட்டிருந்தபடியால் பஞ்ச நிவர்த்தி காரணமாக தெப்பக்குளம் ஆரம்பித்திருக்கலா மென்றும் நிதானிக்கப்படுகின்றது.

# தெய்வராயதேசிக சுவாமிகள்

அதேகாலத்தில் விருதுநகரில் அமைக்கப்பட்ட வால சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மூர்த்திஸ்தாபனமான ரக்ஷாபந்தனமும் செய்து வைத்தவரும் பொன்னம்பலக் குருக்களேயாவர்.

பொன்னம்பலக் குருக்களானவர் விருதுநகர்க் கண் வந்த தமது முன்னோர் ஸ்தாபித்து நடத்தி வந்திருக்கப் பட்ட தமிழ்க்கல்லூரியிலும், தமதிளம் பருவத்தில் அமர்ந்து நாடார் சிறுவர்களுக்கு மட்டுமல்ல மற்றையோர் சிறுவர்களுக்கும் தமிழ் அபிவிர்த்தி செய்து வந்தனர். தற்காலமுள்ள ஆங்கில பாடசாலை யேற்படுவதற்கு முன் பள்ளிக்கூடமே இந்நகருள்ளவர்களுக்குக் கலையருளும் கணபீடமா யிருந்து வந்தது.

இவ்விதமாய் மன்னர்முடிப் பொன்தைக்கும் செஞ் சரணப் பொன்னம்பலக் குருவை என்று அவர் சரமகவி யாற்புகழ்ந்தபடி விளங்கும் பொன்னம்பலக் குருக்கள் சகலரும் மதித்துப்புகழும்படியான சைவசித்தாந்தியேயாவர்.

பொன்னம்பல சுவாமிகள் புண்ணியலோக பிராப்தியான

## சரமகவிகள்.

(பல வித்துவான்களாற் பாடப்பெற்றன.)

### காப்பு வெண்பா

பொன்னம் பலதேசிகசாமி பொற்புடனே
பொன்னம் பதிசேர் புகழோத—இன்னருள்செய்
வானத்தான் வெள்ளனத்தான் வாழ்த்துமொருமூன்று
தானத்தா னீசன் சுதன்.

## அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தன்னனையர் பிறரிலராய்ச் சகலகலை களுமுணர்ந்து
தாரணி யோர்க்கு
மன்னனையர் முதலாய விருதூர்ப்பொன் னம்பலமா
மணியே நின்னை
பொன்னனைய ரெனவுவக்கும் புலவரெதிர் கொண்ட—
ழைக்கப் பூமா னத்தில்
மின்னனையார் கைக்கவரிக் கால்தழுவ விண்ணுலகை
யுற்றாய் சொல்லோ. 2

அக்கலைகொண் டிதிபணியு மரன்பரமே யாகுமற்ற
தன்றா மன்றே
எக்கலையும் விதந்தெளியு மெவ்வுலகத் தேவர்க்குமகத்
திருளை நீக்கி
ஒக்கலையர் முதற்பணியும் விருதூர்ப்பொன் னம்பல
வொண் மணியே பாசச்
சிக்கலைநீத் தார்பரவத் தேவதரு நீழலிடைச்
சேர்ந்தாய் கொல்லோ. 3.

## வெண்பா.

பூவுலக வாழ்வதுவும் போதுமெனநினைந்து
தேவுலக வாழ்வடையச் சென்றனையோ—மூவுலகும்
போற்றப் புகழ்படைத்த பொன்னம்பலக் குருவே
சாற்றுகனி வாய்திறந்து தான். 4.

அறுசீர்க்கழிநெடில்.

என்னையுமோர் பொருளாகப் புதல்வனெனப் பெற்றுவளர்த் திதுநாள் காறும்
தன்னுயிர்போ லோம்பியெனக் கருளளித்த பெருவாழ்வே தருமக் குன்றே
பொன்னுலகோர் வேந்துநின்பா லுபதேசம் பெறவழைக்கப் போனாய் சொல்லேர்
மன்னவர்கள் சிரத்தணியு மலர்க்கழற்பொன் னம்பலமா தவத்து வாழ்வே. 5

பூவிருக்குஞ் செழுங்கமலப் பொகுட்டிருக்கு மின்சேர் பைம் புயலு நாவிற்
பாவிருக்கு மடந்தையுளம் பயின்றிருக்கும் புத்தேளும் பணிதற் கெட்டா
தேவிருக்குங் கைலையினிற் றிகழ்ந்திருக்க மனதுவந்து சேர்ந்தான் செய்ய
மாவிருக்கும் புகழ்தேர்பொன் னம்பலதே சிகக்குருச் சுவாமி மன்னே. 6

எண் சீர்.

வண்டிருந்தி மலர்த்தடஞ் சூழ்ந்தலகில் செல்வம்
வளர்விருத்தை நகரில்மன்னர் குருவாய்த் தோன்றிக்
ஈண்டிருந்த மொழிபகர்ந்து தமதன் பர்க்குக்
கதிமருவும் வழிகாட்டி யிகந்து றந்தே

அண்டருங் காண்டற் கரியமறைதேர் பொன்னம்
பலக்குருசுவாமியினு டடைந்த தோர்ந்து
பண்டிருந்த தேவர்கடே சிகனும் வாவிப்
பங்கய நாளத்தினிலே பதிந்தான் மாதோ. 7.

வேறு.

அன்னமிறங்கா தலைந்தானை யன்விடமுண் டான்பரம
னரூபி யானான்
சின்னன்மத னுடல்குறைந்தான் மதியலைவற்றான் றுளபக்
கமலக் கண்ணன்
வன்னமயி லோன்கண்ணீ ராறானான் விருதுநகர்
வசிக்கு ஞானப்
பொன்னிகர்பொன் னம்பலதே சிகனமர ருலகமதிற்
போகப் பார்த்தே. 8.

சிலைக்கைமத னெரிந்ததுவுஞ் சினாலை முண்டதுவுந்
தேசத் தோர்கள்
கலக்கமுற்று மண்மிசையே விழுந்துபுரண் டழுவதைத்
யுங்காணாதான் போல்
பலக்குடனே தேவகணஞ் சிலதனுப்பி மாவிருதைப்
பதிவாழ் பொன்னம்
பலக்குருவின் வரவையெதிர்பார்த்திருந்தானுபிரங்கட்
பகவன் மாதோ. 9.

வெண்பா.

மன்னுந் தமிழ்மணக்கும் வாயானை வானவர்கோன்
தன்னம் பதிசேர்ந்த தாதாவை—மன்னர்முடிப்
பொன்றைக்குஞ் செஞ்சரணப்பொன்னம்பலக்குருவை
யென்றைக்குக் காண்பே னினி. 10.

சாந்தகுணக் குன்றே தமிழ்வடநூற் பொக்கிஷமே
போந்து சிதாகாயம் புக்கினையோ—மாந்தர்
இதயவிருட் கொளியே யென்றுய்பொன்னம்பலநற்
சுதையே யருட்கொண்டு சொல். 11.

வேறு.

பொய்புலகும் பொய்ச்சடமும் பொய்க்கானற் சலமெனவே
போதத் துன்னி
மெய்புலகாஞ் சிதானந்த வெட்டவெளிப் பரஞ்சுடரில்
வீழ்ந் துய்ந்தாயோ
மையுலவும் பொழில்விருதூர் மேவியென்று மன்னரெலா
மகிழ்ந்து போற்றும்
ஐயமலர்ச் சரணுளபொன் னம்பலதே சிகநாமச்
சுகுணக் குன்றே. 12.

வெண்பா.

பொல்லாத வந்தகனே பொன்னம்பலக் குருவைக்
கொல்லாது விட்டுவிடக் கூடாதோ—கல்லாத
மூடா விறகுக்காய் முட்டிட்டாற் கற்பகப்பூங்
காடா வழிக்குங் கருத்து. 13

வேறு.

செந்நெலே கன்னல்காட்டுந் திருவிருதூரில் மேவும்
மன்னவர்க்கணியாம் பொன்னம்பலக்குருவா ஞட்டின்பம்
உன்னியே யமரர்வாழ்த்த ஊர்வசி கவரிவீச
பொன்னுலக மரர்வேந்தனெதிர் கொளப்புக் கான் மாதே

வேறு.

வேதமணக்குந் திருவாயும் விமலன்கமல மலரடியைப்
போதமுடனே நறுமலராற் பூசைபுரியுந் திருக்கரமும்
பூதியணியும் பிறைநுதலும் பொய்யாமொழியு மிருவிழியு
மேதமறநான் காண்பதெப்போ வேந்தாய்பொன் னம்பலகுருவே.

வேறு.

தென்னாட்டில் நன்னாடாந் திருப்பாண்டி நாடெனுமின்
றிகழு நெற்றி
நன்னாட்டம் போலிலங்கும் விருதூர்ப்பொன் னம்பலநன்
மணியே நீர்சூழ்
இந்நாட்டில் நெடுநாளா யிருந்ததுவும் போதுமினி
யிமையோர் வாழும்
பொன்னாட்டைப்பார்க் கவென்று புட்பகமானத் தின்மிசை
போந்தாய் சொல்லே. 16.

வெண்பா.

பொன்னம் பதியாள் புரந்தரா பூவுலகப்
பொன்னம் பலக்குருவைப் போந்தழைத்து—நின்னருகில்
வைத்ததினா லன்றோ மறையோனு பொன்னவனும்
அத்தலத்தை விட்டகன்றா னன்று. 17.

பொன்றா நிதியனைய பொன்னம் பலக்குருவைக்
கொன்றாயே யாபாவி கூற்றுவா — வென்றி
முரசின்றோ லற்றால் முனிவன் பசுவை
யுரித்துத்தான் பூட்டுவா ரோ. 18.

வேறு.

முன்னாளிலறு முகவன் பிரணவத்தின் பொருள்கேட்ப
மொழிதற் கெட்டா
தென்றாலென் றுரைத்தவுடன் திருக்கரததாற் குட்டியிருஞ்
சிறையி லிட்ட
சின்னமதை நினைந்தின்னு மவன்வருவா னெனவோர்தென்
விருதூர் மேவும்
மன்குலதே சிக/பொன்னம் பலகுருவையரு கழைத்தாய்
மலர்ப்புத் தேளே. 19.

வேறு.

செய்யபங் கயமாது தினமு மகலாது வளர்
திருவிருது நகரமதனில்
தென்னவர் குலகுருவ தாகியுலகெங் கணுஞ்
சிவசமய நெறிபுகட்டிப்
பையரவ ணிந்தசிவ னேபரம தாமெனப்
பரமதத்திமிர நீக்கும்
பானுவாய்ப் பூதலத் தொடுமீ தலத்திலும்
பரவுபுகழ் பொங்கியோங்கும்

துய்யபொன் னம்பல தேசிகன் கைலையாம்
சுகமிகும் பதவியெய்த
துன்முகி நலாண்டினில் மீனமதியை யைந்து
சொல்லரிய தேதியதனில்
வையகம் புகழ்சோம வாரத்தின் மிக்கான
வளர்பிறைத் திருதிகையொடு
வருபரணி நாளெனும் புண்ணிய காலமே
வாய்த்தினி திலங்குமாதோ.

தெய்வராய தேசிக சுவாமி குருபரம்பரை.

## துதிப்பாடல்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

வெண்ணெய் நல்லூர் மெய்கண்ட சந்தானத்தில்
மேவுதெய்வ ராயகுரு தேசிகன்றாள்
எண்ணிநிதந் துதித் திறைஞ்சிச் சொக்கலிங்க
வெங்கோமான் றாள்பரவி யிகத்தோர்க் கெல்லாம்
நண்ணுமுத்தி நெறிகாட்டு மிராமலிங்க
தேசிகனை நடராஜ குருவைப் போற்றி
மண்ணுலகில் மகிழ்ந்தெவருந் தினமும் போற்று
மதுரைவிநா யகக்குருவின் மலர்த்தாள் போற்றி.

இப்பாடலினுள்ளார் ஐவர்.

அறுசீர்க்கழிநெடில்.

மும்மலத்தின் கட்டறுத்த கனகசபைக் குருபரனை
முடிவேந் தேத்தும்
செம்மனுய ராகமங்கே ரம்பலவா ணப்பெயர்கொள்
சீரோன் பாதம்
பொம்மலுடன் றுதித்தேத்தி மதுரைவிநா யகக்குருவின்
புனித பாதம்
அம்மியமா மலர்தூவித் தினந்தினமு மனத்திருத்தி
யன்பு செய்வாம். 2.

இப்பாடலில் மூவர். ஆக எண்மர்.

சதுர்வேத ஞானகுரு தேசிகன்ற னடிமலரைச்
சாந்தம் பூத்த
மதுரமொழித் தேசிகனுப் மன்னுசொக்க நாதர் தமை
மன்னர் போற்றும்
பதுமமலர்த் திருவடியான் மதுரைவி நாயகக்குருவைப்
பணிந்தோர் பாவக்
கதிரறுக்கும் வாளனையா னிராமலிங்க தேசிகன்றன்
கழல்கள் போற்றி. 3.

இப்பாடலில் நால்வர். ஆகப்பன்னிருவர்.

திருந்துதமி ழாகத்திபனை நிகர்த்த பழனிக்குமார
தேசிகன் பொன்

விருந்தவன சப்பதத்தை யேத்திவிரு தாரமர்ந்த
வெங்கோன் வண்டார்
குருந்தடியி லிருந்தவரன் றாண்மலரை நிதம்பரவுங்
கோமான் ஞானப்
பெருந்தவசற் குருவாம்பொன் னம்பலதே சிகன்பதத்தைப்
பேணி வாழ்வாம். 4.

இப்பாடலில் இருவர். ஆக பதினூன்கு குருபரம்பரை.

பாலையா வென்னும்,

## இராமலிங்கக்குருக்கள்.

இவர் பொன்னம்பலக் குருக்களின் மூன்றாவது குமாரர் கி. பி. 1865-ல் நிகழ்வதான குரோதனஹூ இப்பூவுலகில் உதித்தனர். கைலாச பரம்பரை திருவெண்ணைநல்லூர், மெய்கண்ட சந்தான உபதேசமாயெழுந்த தெய்வசாப சுவாமிகள் குருபரம்பரை விளக்கம் செகத்தில் பிரசித்தியடைவதற்கு இவர் கல்வியே சாதனமா யிருந்ததென்று சொல்லலாம். தமிழ்க்கலையாவுந் தெரிநதவர், விரைவாய்ப் பாடும் சக்தியுடையவர். சென்னைமாகாணத்தின்கணுள்ள கல்வி விற்பனர்கள் இவரைத் தெரியாதவரிரார். பெரிய பிரபுக்கள், உத்யோகஸ்தர்கள் சரியாசனந்தந்து இவர் கல்வியூகத்தைப் புகழ்ந்து பேசுவார்கள். சோதிட சித்தாந்தம் நன்றாய்த் தெரிந்தவர், பலன் விளங்கச் சொல்லுவார், [illegible] நூல்கள் சிலவற்றை சீர்திருத்தி வெளிப்படுத்தி

யிருக்கின்றனர். பாடி வெளியிட்ட தமிழ்நூல்கள் பலவுள 1907-ல் சச்சிதானந்தம் பிரஸ் என்னும் ஓர் முத்திராட்சரச் சாலை விருதுநகரில் ஸ்தாபித்தனர். அது அநேக ஜனோப காரமாய் இவ்விடமிருந்து வருகின்றது. குருபரம்பரை யான மகத்துவத்தோடு விளங்கிய தமது குடும்பம் தரும சாதனமான ஆதாரத்துடனிருந்துவர வேண்டுமென்னும் நிறைந்த எண்ணமுடையோராய் கி. பி. 1905-ல் விசுவா வசு வருடத்தில் தம்மனையின் கீழ்பக்கம் ஊருக்கு வெளி யான இடத்தில் 4-எக்கர் அளவான ஒருசங்கிலி நிலம்2000 ரூபாய் கிரையந்துக்குவாங்கி அதனில் கிணறு வெட்டி நந்த வனமுண்டுசெய்து பாலசந்திர விநாயக ரென்னும் பேருள்ள ஓர் விநாயகராலயமுஞ் செய்து வைத்தனர். அதே வருடத்தில், சகோதரி பழனியம்மாள் குமாரனும், தமது மருமகனுமாகிய அய்யம்பெருமாள் நாடார் சிவபதஞ் சென்றடைந்தனர்; அவரிடம் விளங்கிய அபூர்வமான குணங்களையும் மற்று விசேஷங்களையும்தெரிந்து அவர் திரு வுடலை மேற்படி நந்தவன மேல்பக்கம் பாலசந்திர விநாயகர் கோவிலருகில் சமாதிகஞ்செய்து ஆலயமமைத்து சிவலிங்க பிரதிஷ்டை செய்து அந்தமான தினமாகிய தைமீ அஸ்த நக்ஷத்திரத்தன்று குருபூசைத் திருப்பணி விடைகள் செய் துவருகின்றனர்.

இராமலிங்கக்குருக்கள் தமதுஅநுஜையான சகோதரி யும், நந்தவனத்தில் சமாதி யாலயங் கொண்டிருக்கும் அய் யம்பெருமாள் நாடாரின் தாயாருமாகிய ஷை பழனியம்மாள்,

துன்மதிகார்த் திகைமாசம் இருபதுநா லாந்திகதி
சுக்கிர வாரம்
மின்மருவும் பூர்வபக்ஷத் தசமிசே பதிநாளில்
விருக்ஷி கத்தில்
பொன்மருவுந் திருவிருத்தை நகர்ப் பழனி யம்மாளிப்
பூவை விட்டு
தென்மதுரை யரசுசெய்த சுந்தரன்பொற் கயிலைமலை
சேர்ந்திட் டாளே.

என்று கூறும்படியான ஷெவருஷத்தில் அந்தியமாகி விட சகோதரி வாஞ்சை நிரப்பப் பெற்ற குருக்களவர்கள் அருமையான இரங்கல் பாடல்கள் அந்த அம்மாள் பேரில் பாடி வருந்தியிருக்கின்றனர்.

இம்பருல கினிவிருப்ப தியல்பல்ல
வெனவுந்த னிதயத தெண்ணி
யும்பருல கடைந்தனையோ வைகுந்த
முற்றனையோ வுமையா ளோடு
நம்பரமன் வாழ்கயிலை சென்றனையோ
தென்விருத்தை நகர மீதில்
தம்பியென வெனையழைத்த சோதரியே
பழனியம்மா ளென்னுந் தாயே.

பொன்னுலவும் பூவுலகம் பொருளல்ல
வெனநினைத்துப் புலவர் வாழும்

நன்னகரஞ் சென்றனையோ பிரமத்திற்
கலந்தனையோ நான்கு வேதஞ்
சொன்னபடி மறுஜெனன மெடுத்தனையோ
யின்னமெனத் தோன்ற வில்லை
என்னுடன்வந் தவதரித்த பழனியம்மா
ளெனுந்திருவே யியம்பு வாயே.

அள்ளியன்னக் கறிவகையும் அறுசுவையோ
டுவந்தளித்த அருமைக் கையும்
தள்ளிநில்லென் றுரையாமல் தம்பியென
வினிதழைத்த தயாள நாவும்
வெள்ளியென நரைத்தசிகைக் கற்றையுமென்
செங்கரத்தால் விரும்பி வைத்த
கொள்ளியினால் வேகிறதே ஐயஹோ
யாரிடத்திற் கூறு வேனே.

தாய்க்கதிக மானவன்பு பாராட்டி
யெனைவளர்த்த தமக்கை யாரே
சேப்க்கரி கொண்டா னடியைச்
சேர்ந்தனையோ நாஸ்திகர்கள் செப்புகின்ற
பேய்க்கதைதா னிசமாச்சோ ஆகமவே
தத்தின்முறை பிறழா வண்ணம்
வாய்க்கரிசி யிட்டெரியை மூட்டிவிட்டேன்
வரும்விதியை யார்வெல் வாரே.

உலகமெல்லாம் பொய்யெனவே முன்னவர்க
ளுரைத்தமொழி யுண்மை கண்டும்
பலகலையு மப்படியே சொல்லியதைத்
தெரிந்திருந்தும் பன்னூற் றுண்டு
நிலமதனி லிருப்பதுபோல் நெஞ்சகமே
நீநினைந்தாய் நேற்று வாழ்ந்த
கலைமகனை யென்றமக்கை யின்றிருக்கக்
காணகிலையே கவலை யென்னே.

பணமிருப்ப தாய்நினைத்தும் பவுசிருப்ப
தாய்நினைத்தும் படித்துத் தேர்ந்த
குணமிருப்ப தாய்நினைத்துங் குலமிருப்ப
தாய் நினைத்துங் குவல யத்தில்
மணமிருப்ப தாய்நினைத்து நெஞ்சேநீ
கெர்வமுற்று மயங்கு கின்றாய்
கணமிருப்ப துண்மையில்லை யென்றமக்கை
யின்றிறக்கக் கண்டிட் டேனே.

தமது தமையன் புதல்வரும் 15-வது குருவபிஷேகக் குருக்களும் 16-வது தலைமுறையானவரும் ஆகிய குமாரய்யக் குருக்களென்ற பழனிக்குமாரக் குருக்கள் தம் 29-வது வயதில் 1906-ல் நிகழும் பராபவ௵ ஆடி௴ உரோகணி நக்ஷத்திரத்தன்று இகலோகம் நீத்துப் பராப்தியாயினர். அதனால் நமது குருக்கள் குடும்பம் மிக்க கவலையிலாழ்க்

திருந்தது. பாலய்யா வென்னும் இராமலிங்கக் குருக்கள் முன் சொல்லிய அய்யம்பெருமாள் நாடார் சமாதியாலயத் தென்புறம் அவருக்கு சமாதியாலயமும் சமைத்து லிங்கப் பிரதிஷ்டையுஞ் செய்து வருடா வருடம் குருபூஜையாதிகள் செய்து வருவதாயினர்.

## தில்லையம்மாள்.

இந்த அம்மாள் மேற்சொல்லிய 16-வது குமரய்யக் குருக்களென்ற பழனிக்குமாருக் குருக்களின் ஏகபுத்திரி; கி. பி. 1900. சார்வரிஹூ உதித்தனர். ஆண்வாரிஸாயிருந்தால் 16-வதுகுருப்பட்டமாய்வரப்பட்டவர்,நல்லபுத்திரிகா செல்வமாய் வளர்ந்து தமது 12-ம் வயதில் சென்னம்பட்டி சிதம்பர நாடார் திருக் குமாரரும், மிக்க சாதுவானவரும், தக்கோர் நேயருமாகிய கந்தஸ்வாமிக் குற்றாலவர்மா என்பவர்க்கு திருமண முடிக்கப்பெற்றனர்; அவருடைய வாழ்க்கைத்துணையாய் 12-வருட காலம் வாழ்ந்திருந்து 1924-ல் நிகழும் ருத்திரோக்காரிஹூ மார்கழிமீ சுவாதி நக்ஷத்திரத்தில் சிவபதமடைந்தனர். அந்த அம்மையாருக்கும் முன் சொல்லியபடியான சமாதியாலயம் அப்புண்ணிய சீலர்கள் சமாதி யாலயங்களுக்கு இடையில் அமைத்து அந்தமான மாத நக்ஷத்திரத்தில் குருபூசையாதி செய்துவருகின்றனர்.

முன் 11, 12-ம் பக்கங்களிற்கண்டபடி 2-வது சொக்கநாதக் குருக்கள்., 3-வது இராமலிங்க ஸ்வாமிக் குருக்கள்., 4-வது நடராஜ ஸ்வாமிக் குருக்கள்., 5-வது மதுரைவிரா

யகக்குருக்கள்; இவர்கள் வழிவழியாய் கி. பி. 1672. முதல் 1735., 40-வரை திருமங்கலமிருந்து வந்தனர்; இவர்கள் சகோதரப்பிரிவில் மாணிக்கவாசகர் என்னும் ஓர் கல்விமானிருந்துவந்ததாய்த் தெரிகின்றது. இக்கல்விமானிடம் திருமங்கலத்தில் புகழேறி நாடாரென்று பேர்பெற்றிருந்த ஓர் வித்வான் மேற்படி மாணிக்கவாசகக் குருக்களிடம் கலையாதிகள்பயின்று வித்யாகுருவாகக் கொண்டார்.

வித்வான் தாம்பாடிய அரிச்சந்திர அம்மானையில்,

மாணிக்க வாசகர்க்கு வாய்த்தவொரு நற்சீஷன்
ஆணிப்பொன் னீள்மதுரை யாதிகயற் கண்ணியென்னும்
நாரணி கல்யாணி நளினமலர்ப் பாதமதைப்
பூரணமாய்ப் போற்றிப் புகழும் புகழேறி
இன்பரச மாகியக வீஸ்வரர்கள் கொண்டாடும்
நம்புங் கலியுகநா லாயிரத் தெண்ணூற்றுமுப்பத்
தெட்டாண் டதனி லிலங்கு நளவருடம்
மட்டாருங் கும்ப மகத்தி லியல்சிறந்த
தருமதானம் பெருகித் தாரணியோர் கொண்டாடும்
திருமங்கல நகரிற் செப்பினன்கா ணம்மானை.

இவ்விதமாய் மாணிக்கவாசகர் என்று நாமம் படைத்தோர் இருந்துவந்ததற்கிசைய 27-ம் பக்கத்திற் கண்டிருந்தபடி திருமங்கலம் சென்ற இராமலிங்கக்குருக்கள் குமாரர் குருஸ்வாமிக்குருக்கள்; பழனிக்குமாருக்குருக்கள் இவர்களில் பழனிக்குமாருக்குருக்கள் புதல்வர் மாணிக்கவாசகக் குருக்

களாவர்; இவர் சகோதரர் பாலய்யாவென்னும் குருஸ்வாமிக் குருக்கள். முன் சொல்லிய குருஸ்வாமிக் குருக்கள் புதல்வர் இராமலிங்கக் குருக்கள் இவர்களை தற்காலத்துள்ளவர்கள்.

இல்லையம்மாள் காலஞ்சென்றபின், அவரைத்திருமண முடித்து வாழ்ந்துவந்த "சென்னம்பட்டி குற்றால நாட்டார் மரபு: கந்தசாமிக் குற்றாலவர்மா என்பவர் மேற்சொல்லிய சோதிடசாஸ்திர நிபுணர் மாணிக்கவாசகக் குருக்கள் புத்திரி தங்கம்மா ளென்னும் பத்திரகாளியம்மாளை மேற்படி 1924-ல் நிகழும் ரத்தாட்சிஸு ஆற்பிசிமீ 26உ திருமண முடித்து இன்புற்று வாழ்ந்துவருவதாயினர்."

மேற்சொல்லிய "தில்லையம்மாள்" குலம் விளக்கும் விளக்காகவும், குருமரபுக் கொழுந்தாகவு மிருந்துவந்தபடியால், இவ்வம்மையால் சந்ததிவிர்த்தியிலங்குமென்றெண்ணியிருந்த குருக்களானவர் அவ்வம்மை அந்தியங்கண்டு மனவெறுப்பால் உலகில் 'ஆக்கை நிலையாமை' யென்னு முறையில் கூறிய பாடல்கள்.

தாலத்தின் வாழ்வைச் சதமென் றுளத்தெண்ணி
மாலுற்று மன்றாய் மடநெஞ்சே—ஆலத்தில் [வே
தோன்றுங்குமிழி விண்ணில்தோன்று மின்னல்வில் லென
ஆன்றோர்கள் சொன்ன தறி.

சொற்பன நேரிவ்வுலகத் தோற்றமதை மெய்யெனவே
பற்பலவா யெண்ணிப் பரதவித்தாய்—விற்பனரைச்

சோரா தநெஞ்சே செகத்தின் வாழ்வத்தனையு
நீரார் குமிழிக்கு நேர்.

மூடமட நெஞ்சமே மூதறிவைத் தப்பவிட்டு
காடதனில் வாழ்மிருகங் கானனீ—ரோடுவதைப்
பார்த்தே மயங்குதல்போல் பாருலகத் தோற்றமதில்
வேர்த்தே யலைந்துழன் றாய் வீண்.

மாண்டாரை யெண்ணி மயங்கினாய் மாநிலத்தை
யாண்டார்கள் கோடி யழிந்தார்கள்—நீண்டபுகழ்
பெற்றசிரஞ் சீவி பிரமன் முதற்றேவர்
இற்று மடிந்தார்க ளே.

சாதிசமையந் தமர்சுற்ற மென்று முன்னோர்
ஓதியதை மெய்யெனவே யோர்ந்துநெஞ்சே—மேதினியில்
எண்ணாத வெண்ணமெல்லாம் எண்ணி யுழன்றுழன்று
புண்ணாகி நொந்தாயிப் போ.

திருமங்கலம், ஒண்டிப்புலிநாயக்கனூர், விருதுநகரா-
கிய மூன்றூர்களிலும் ஐந்து சமாதி யாலயங்களுள்ளன; இவ்வாலயங்கள் சைவாகமப்படி தேவாரப்பாடல்கள்பாடப் பெற்று சுராசாற்புதமாய்ப் பூசித்துவரப்பெறுகின்றன.

அட்டாத நக்ஷத்திரங்கள்.

சீர்த்தமன்னவர்க ளென்றுஞ் செறிதிரு மங்கலத்தில்
ஆர்த்தமா தவர்கள்சூழ வாகமபு ராணவேத

சாத்திர முறைக்குந் தெய்வராயதே சிகசந்யாசி
கார்த்திகை மாசம்பூச நாளினிற்கயிலை சேர்ந்தார்.

வண்டிமிர் கொன்றையந்தார் வனைசிவபரனைப் போற்றுந்
தண்டலில் தவத்தமேலாஞ் சதுர்வேத ஞானசுவாமி
தொண்டினம் பணியவொண்டிப் புலிநகர்துறந்துதையாய்க்
கண்டனன் மதியிலுத்திர நாளினிற்கயிலை சேர்ந்தார்.

செய்யினில் விளைவுமல்குந் திருவிருதூரிற் சீர்சால்
கையினில் மழுமானேந்துங் காரணனடியைப் போற்றும்
மெய்யினிற்றிகழுமய்யம்பெருமானென்றுரைக்குமேலோன்
தையினி லஸ்தநாளே சகந்தனை நீத்தநாளே.

சமரய்யாவென் றேருமென்று தம்பியைப்புகழ்ந்து வந்தோர்
நமரய்யா வென்னுமாடி புரோகணியென்னு நாளே
அமரய்யர் வென்றுகூறி யரசர்கள் தவிசுநல்கும்
குமரய்யாக் குருக்களிந்தக் குவலயம் நீத்தநாளே.

மல்லையே புவனங்காணு மார்கழிச் சோதிநாளே
முல்லையேய் முறுவனல்லீர் முனிவர்கோன் மொழியிலாணை
கல்லையே யிகழ்மினென்னுங் கற்பினுக்கரசி யெங்கள்
தில்லையம் மாளுமிந்தச் செகந்தனை நீத்தநாளே.

## இராமலிங்கக் குருக்களவர்களால் எழுதப்பெற்ற நூல்களாவன.

விருதுநகர் சுப்பிரமணியசுவாமி ஆசிரியப் பதிகம் 1., மயில்வாகனமாலை 2., மேற்படி சுவாமிமீது வாரப்பதிகம்,

மார்தப்பதிகம் 3., தூதிக்கை விநாயகமாலை 4., மாரியம்மன் பதிகம் 5., வெயிலுகந்தம்மன் பதிகம் 6., நளச்சக்கரவர்த்தி அம்மானை 7., பட்டணத்தார் அம்மானை 8., மதுரை மீனாக்ஷியம்மன் கப்பற்சிந்து 9., மாரியம்மன் அகவற்பா 10., மோடிவித்தை 11, வன்னிராட்சத சங்காரம் 12., திருத்தாலாட்டு 13., திருக்கலியாண வாழ்த்து (ஊஞ்சல்பாட்டு, மங்களம், லாலி முதலியன ஆகியது) 14., லண்டன் முடிசூட்டுக்கும்மி 15, டில்லிதர்பார் கும்மி 16., அனந்தராமையர் திருமுகவிலாசம் 17.

இவற்றில் திருத்தாலாட்டு என்னும் சிறு நூல் தேன் போன்ற மதுர மொழிகளமைந்து பல பதிப்புகளாகி திராவிடநாடெங்கும் பாவியிருக்கப்பெற்றதாகும். 'மீனாக்ஷியம்மன் கப்பற்சிந்தும் அதுபோன்றது. கலியாண வூஞ்சல் நாடார் மரபைச் சிறப்பித்துக்கூறி நிலவிவரப்பெற்றதாகும். மாகபுராணம்: அதிவீரராமபாண்டியன் பாடி ஏட்டுப்பிரதியாயிருந்துவந்ததை சீர்திருத்தி அச்சியற்றினர். அதற்கோர் முகவுரையுங் கூறியிருக்கின்றனர். இவர் இந்நூல் அச்சிட்டதை வியந்து பேரையூர் சமஸ்தானவித்வான் அஷ்டாவதானம் **மீனாக்ஷி சுந்தரக் கவிராயர்** சாற்றுக் கவியொன்று தந்திருக்கின்றனர். சோதிடக்கிரக சிந்தாமணியென்னும் பெரிய வருஷாதி நூல்: பல பிழையுற்றிருத்தலை நோக்கி பல சோதிடசிகாமணிகளின் வேண்டுகோளின்படி சீர்திருத்தி அச்சியற்றி உதவினர். கூவலப்புரம் ஆன்ன

தாண்மகத்துவ புராணம், விக்டோரியா மஹாராணி அம்மானை ஆகிய இரண்டு நூல்களையும் பாலவநத்தம் மஹாவித்வான் சுப்பாரெட்டியார் அவர்களைக்கொண்டு பாடும்படி செய்து வேண்டிய சகாயமாயிருந்துவந்தனர்.

மேற்கண்ட விக்டோரியா மஹாராணி அம்மானை 1901-ல் எழுதப்பெற்றது. ஆங்கிலவரசர் மரபு சுருக்கமாகவும் 1819முதல்1900வரையான மகாராணியார் ஜீவியசரித்திரம் விரிவாகவும் அந்நூலிற் கூறப்பட்டிருக்கின்றது. அந்நூல்செய்ய முயற்சியெடுத்துப் பாயிரத்தில் நூலாசிரியரால் புகழ்ந்துகூறப்பட்டிருப்பவரும் முகவுரை யெழுதியவரும், விருதுநகர் க்ஷத்திரிய வித்தியாசாலை ஹெட்மாஸ்டர் N. S. மாணிக்கவாசக நாடாரவர்; அவர் சரித்திரம் பாடல் ரூபமாக எழுதி அச்சிடப்பட்டிருக்கின்றது. இராமலிங்கக் குருக்கள் மேற்படி மஹாராணியம்மானை அச்சிடவேண்டிய முயற்சி யெடுத்தவுடன் 'சாற்றுக்கவி'யொன்றுந் தந்திருக்கின்றனர். அக்கவி வருமாறு:—

நலஞ்சிறந்த கலியையா யிரமேன்றிற் பிலவ
நவின்மேட மதிபிருபா னென்மெய்தி புகர்நாள்
தலஞ்சிறந்த விருதூரில் க்ஷத்திரிய வித்யா
சாலையினின் மேலோர்கள் பிரபுக்க ளூத்யோகஸ்தர்
வலஞ்சிறந்த கவிஞர்முதற் பற்பலரு மனது
மகிழ்ச்சியுடன் றெள்ளமுதி மாந்தினர்போ லுவப்பக்
குலஞ்சிறந்த சக்ரவர்த்னி யம்மானை யதனைக்
கொற்றமிகுஞ் சுப்பைய நாவலனரங் கேற்றினனே.

1885, 90. ஆகிய வருடங்களில் தென்பாண்டிநாட்டின் திலகமாகிய திருநெல்வேலிப்பக்கமுள்ள நாடார்களுக்கும், பிராமணர்களுக்கும் ஜாதி விஷயமான விபகாரங்கள் முதிர்ந்து நிந்தையான நூல்களும், அவைகளுக்கு மறுப்பான நூல்களும் தோன்றிக்கொண்டிருக்கும்போது வாலிபதிசையாயிருந்த 'இராமலிங்கக் குருக்க'ளவர்கள் நாடார்கள் வேண்டுகோட் கிசைந்து நாடார்கள் கக்ஷியினின்று சொல்லிய பாடல்களாவன.

நீரெலாம் வராலினங் குதித்துவிளை யாடிவரும்
 நெல்வேலி யென்னு நகரில்
நிகரற்ற சான்றோர் குலத்தவர்கள் தானுமே
 நீதியுடன் வாழு நாளில்
பேரறிவி லாதவோர் செந்திநா தையரும்
 பின்புபுன் கணர்கள் சிலரும்
பிரசண்ட மாருத மென்றுமொரு போலிநூல்
 பிரட்டினு லச்சியற் றப்
பாரெலாம் புகழ்பிறைசை மார்த்தாண்ட நாடனும்
 பண்புட னதைய றிந்து
பவனு சனத்தொடு மற்றுமொரு நூலுமே
 பாங்குடன் விடுத்த போது
ஊரெலா மையமேற் றுண்குலக் கவிஞரு
 மொழுக்கமில் லாத சிலரும்
ஒடுங்கினர் பரிதிமுன் னிருளது போலவே
 யுமன்றுமுன் றேங்கி னரே.

இவ்வாறு ஜாதியபிமானியாகக் கருதப்பட்ட போதிலும், உண்மையாகப் பார்க்கில் பொதுநலப் பிரியராகவே காணப்பட்டுவந்திருக்கின்றனர்; 1889-ல் ஸ்ரீவில்லிபுத்தூர் சாத்தூர் தாலூகா ஜெனரல்சார்ஜ் டிப்டி கலெக்டராயிருந்த ஆர். அனந்தராம ஐயர் என்னும் பிராமணப் பிரபுவின்மீது 'திருமுகவிலாசம்' பாடியிருக்கின்றனர்; அப்பாடல்களிற் சில வருமாறு:

சயநகரிருந்து மதுரையேகுங்கால்,

அஷ்டாவ தானியென்னு மையங்கார் பட்டகதை
திட்டமுடனோர்கவிஞர் செப்பினார்—இட்டபடி
யேயிருக்கு மென்றுமனத் தெண்ணிவைகை சூழால
வாயிலுக்குச்சென் றுமன வாஞ்சையாய்—கோயிலுக்குள்
ஏகினேன் பன்முரச மெம்மனந்த ராமேந்திர
யோகன் புகழ்போ லொலித்திடக்கண்—டாகமது
பூரித்து வண்கஞ்சப் பொய்கைதனி லேதீர்த்தம்
வாரித்தலை மூழ்கி வான்மணியை—யோரிரண்டு
கையாலே போற்றிக் கசமுகன்றன் ஊப்பரவி
தெய்வவிமா னத்தமர்ந்த தெள்ளமுதை—சைவமுறை
தப்பாம லேவணங்கி—. என்பனவாகும்.

## நாடார் மஹாஜன சங்கம்.

இச்சங்கம் கி. வி. 1910. பிப்ரவரிமீ பிறையாற்றில் ஸ்தாபித்ததாகும்; சங்க ஸ்தாபக மூல புருஷர்:- நாடார்க

ளில் சிரேஷ்டமான தனவந்தரும், அரசாங்கத்தினர் மதிப்பு நன்கமையப்பெற்ற பேராளரும், அரியலூர் ஜமீன்பிரபுவும், ராவ்பகதூர் பட்டம்பெற்ற கண்ணியருமான வே. த. இரத்தினசாமி நாடார் ஆகிய திருவாளரவர். குருக்கள் அதுசமயம் பிறையாறு சென்று மஹாஜனசங்கத்திற்கு ஆகவேண்டிய காரியங்களையும், தென்னாட்டிலுள்ள கிராமங்களுக்கு விகிதங்கள் அனுப்பும் விபரங்களையுங்கூறி முதற் சங்க நிருபண கனவான்களில் ஒருவராகவுமிருந்து வந்திருக்கின்றனர். அதே வருடம் 2-வது கான்பரன்ஸாய் (26-12-1910)-ல் சென்னையிற்கூடிய சங்கத்திலும் கலந்து ஆகவேண்டியவைகளைக் குறித்துப் பேசியிருக்கின்றனர். இது விபரம் "சென்னை இரண்டாம் நாடார் மகாநாடு ரிப்போர்ட்டுப் புஸ்தகம் 25-ம் பக்கத்திற்கண்டிருக்கிறது.

## திருமடாலயம்.

விருதுநகரின் கண் சுமார் 15-வருடங்களுக்கு முன் இராமய்ய தேசிக சுவாமிகளென்னும் ஓர் மகான் இருந்து வந்தனர். அவர் நாடார் மரபினர்; சிறந்த கல்விமான்; சாக்ஷாத் சிவபெருமானை வழிபடும் சைவ சித்தா[illegible] துவித சித்தாந்தங்களையும் ஐயந்திரிபறத் தெரி[illegible] துநகரிலிருந்து அருப்புக்கோட்டை செல்[illegible] ஊருக்குள்ளதாகிய நந்தவன மடமே "ஆன[illegible] எனப் பெயர்பெற்று வழங்கி வருகிறது. அ[illegible] அவரால் அமைக்கப்பட்டு அவருக்குரிய வாசஸ்தானமாய்

இருந்துவந்தது. அக்காலம், நாகலாதபுரத்தில் நாடார் மாபி றுதித்தவரும், கணபதியானந்த சுவாமிகளென்று மேலோர்களால் புகழ்ந்தழைக்கப் பெற்றவரும், அத்துவித வைதீக வொழுக்கத்தில் அதிதீவிரவைராக்கிய சித்தமமைந்தவருமாகிய ஓர் சந்நியாசியார் இவ்விருதுநகரிலும் வந்து அத்துவிதத்தை அநேகர்களுக்குப் போதித்து வந்தனர். கணபதியானந்த சுவாமிகளுக்கும், குருக்களுக்கும் நட்பமைந்தது. குருக்கள் பரம்பரையும் புலால்மறுத்து சைவப் பற்றுடையதா யிருந்து வந்தமையாலும், அதே வொழுக்கத்தைப் போதிப்பதாகிய முறையில் மேற்படி சுவாமிகள் நிற்பவராதலாலும், இந்நட்பு மிகச்சிறந்திருந்தது. இதே நியமுகமா யிருந்துவந்த இராமய்ய தேசிக சுவாமிகளின் அன்பும் கலந்து கொண்டது. ஆக இம்மூவர்கள் முயற்சி-யால் விருதுநகர் நாடார்கள் சிலர் இம்மகான்கள் கொள்-கையதாகிய ஜீவகாருண்யத் தன்மைவாய்ந்த புலால் மறுத்-தலென்னும் நல்வழியைப்பற்றி நடப்பதாயினர்; இவர்கள் கூட்டுறவின் பயனாக ஓர் திருமடாலய மும் உண்டு செய்யப் பட்டது, இம்மடாலயம் கலி: 5011-ல் நிகழும் சாதாரண வருஷம் தைமீ 24ல அதாவது, கி. பி. 1910-ல் பூர்த்தி செய்யப்பட்டது. இப்போது அறுபத்துமூன்று நாயன் மார் திருமடாலயம் என்று வழங்கிவருகிறது.

## கலாசாலை.

மாணிக்கவாசக நாடார் சரித்திரப் பாடல் 13-ம் பாட்டு

"ஏசு பெருமானுட சகாப்தம்—ஆயிரத்
தெண்ணூறுந் தொண்ணூறு மாகிய வருடம்"

என்றதில் அவர் மணமுடிந்து; 22-ம் பாட்டுப்படி,

"மணஞ்செய்த பின்னுண் டிரண்டில்—வரும்
மார்ச்சு மதியிருபத் திரண்டான தேதி"

பாடசாலை வேலை ஒப்புக்கொண்ட பின்பு நிகழும் கி. பி. 1895-ல் க்ஷத்திரிய வித்தியாசாலை யென்னும் பெயர்பெற்ற இக்கலாசாலை ஸ்தாபகமானது.

56-ம் பக்கத்திற் கண்டிருந்தபடியான ஆர். அனந்தராம ஐயர் என்னும் சிறந்த அதிகாரியே பாடசாலைக்கு முளைப்பிடித்து அஸ்திவாரக் கல் நாட்டினவராவர். இராமலிங்கக் குருக்களும் பாடசாலை ஸ்தாபகரில் ஒருவராக இருந்து வேண்டிய முயற்சி யெடுத்திருக்கின்றனர். பின்னொருக்கால் ஷை ஆர். அனந்தராம ஐயர் பாடசாலை வந்திருந்தபோது குருக்கள் பாடிய பாடல்:—

"மங்களஞ்சேர் விருதுநகர் முனம்புரிந்த மாதவமோ
மலராலீசன்
பங்கயத்தா டனைநாளு மேற்றியநற் பயனோவிப்
பாடசாலை

பொங்குவளம்பெருகமுளைப் பிடித்தெொருநாளைலமேசி
புகழ்பெற்றோங்கும்
எங்கள்துரை யனந்தரா மேந்திரபதி யிங்கெழுந்த
தியம்பப்பாற்றே.''

விருதுபட்டி யென்று பலநாளாய் வழங்கப்பட்டுவந்து 1924-ல் விருதுநகர் என்று நகரபரிபாலன சபையார்களால் ஏற்படுத்தப்பட்ட பெயர், நமது குருக்கள் திருவாக்காகிய பாடலின்கண் அமைந்தது இங்கு குறிப்பிடத் தக்கதேயாம்.

57-வது பக்கத்தில் சொல்லியிருந்தபடியான சங்க விஷயத்திலும், அதற்கு முன்னும் பின்னுமான காலங்களிலும் போய்வந்து, பிறையாறு அழகியதிருவாளர் வெ. த. இரத்தினசாமி நாடார் அவர்களிடம் மிக்க நண்புபூண்டுவந்தமையால் அவர் ஞாபகம் இவ்விருதுநகரின்கண் நல்ல நிலையாய் என்றும் உன்னதமா யிருந்துவரும்படி ஷை நாடார் அவர்களிடம் மிக்க நேசவன்பு பூண்டுவந்த நாடார்கள் முயற்சியை ஆதரவாய்க் கொண்டும், தானும் அவர்களி லொருவராய் நின்றும், "ராவ்பகதூர் த. இரத்தினசாமி நாடார் மேமோரியல் லைபிரேரி" என்னும் ஓர் புத்தகாலயத்தை ஸ்தாபித்தனர்; இத்தாபகம் கி. பி. 1918-ஷு ஜனவரீ 18உ ஆகியது.

முன் 44-ம் பக்கத்திற் சொல்லியிருந்த 1907-ல் ஸ்தாபித்த அச்சியந்திரசாலையைப்பற்றியும், இன்னும் குருக்கள் கல்வி வண்மையைப் பற்றியும், தேசா பாஷா விற்பன நிபுணத்துவம் பொருந்திய குலசேகர ராஜ் தாம் எழுதிய "நாடார்குல வரலாறு" என்னும் புஸ்தகம் 55-ம் பக்கத்திற்சொல்லியிருப்பதாவது:- "நாடார் குருக்கள் (வகுப்பினுதித்தோராய்) நாளதில் விருதுபட்டியிலிருக்கிற ஸ்ரீ ராமலிங்க ஐயரென்னும் ராமலிங்கக் குருக்கள் சில தமிழ்நூல்கள் உண்டுபண்ணியும், பதிப்பித்துமிருப்பதன்றி சச்சிதானந்தம்பிரஸ் என்னும் ஓர் முத்திராக்ஷரச்சாலையும் வைத்து நடத்திவருகிறார்கள்."

இன்னும் குலசேகரராஜ் அவர்களின் தந்தையாகவும், லத்தீன், கிரேக்கு, ஆங்கில முதலிய அந்நியநாட்டுப்பாஷைகளையுங்கற்று மேதாவியாகவும், குலாபிமானத்தில் முன்னணியில் நின்றவராகவும்விளங்கி, நாடார் மகாஜனங்களுக்கு வேண்டிய ஜாதீய உரிமைகளைக் கௌரவித்துக்கொண்டு வந்த 'சட்டாம் பிள்ளை ஐயா' அவர்கள் குருக்களவர்களுக்கு நட்பாளராயிருந்து வந்தனர். சட்டாம்பிள்ளை ஐயா, இந்து மதத்துள் புத்தமதம் எழும்பச்செய்த புத்த பகவானைப்போன்று, கிறிஸ்தவ மதத்துள் 'இந்திய மேசியா அல்லது எகோவா மேசியா' என்னும் பேர் கொண்ட ஓர் மதத்தை எழும்பச் செய்தவராவர்.

குருக்களவர்கள் தம்முடைய தாவர சங்கமப்பொருள்களைப் பிற்காலப் பாதுகாப்பாக "பாலசந்திர விநாயகர்" பேருக்கு உயில் சாதனமாக எழுதி வைத்திருக்கின்றனர். இவ்வுயில் சாதனம் 1925-ல் எழுதப்பட்டது. அடியிற் கண்டவர்களை அகுதார்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றது.

"விருதுநகர் சி. குற்றாலம் என்ற கந்தசாமி நாடார் 1.,
,, ப. குருஸாமிக் குருக்கள் 2.,
,, வா. சங்காலிங்க நாடார் 3.,
,, வா. நாகரத்தின நாடார் 4.,
,, வா. சங்கரபாண்டிய நாடார் 5.,
திருமங்கலம், கு. ராமலிங்கக்குருக்கள் 6.,
,, ப. மாணிக்கவாசகக் குருக்கள் 7."
ஆக எழுவராவர்.

## நமது குருக்கள் அவர்களின் முக்கிய அபிப்பிராயம்.

தம்முடைய நந்தனவனத்தில் இருபது இருபத்தைந்து வீடுவரை கட்டிக்கொடுத்து அதற்குத் தில்லையம்மாள் புரமெனப் பெயரிட்டுச் சனங்களைக் குடியேற்றி அதன் வரும்படியைக்கொண்டு ஷை தருமஸ்தாபனங்களை விருத்தி செய்யவேண்டுமென்றும், அதைப் பின்பற்றி வருகிற அகுதார்களும் அதைப் பூர்த்திசெய்ய வேண்டியது அவர்களின் கடமை என்றும் அதில் ஒருதொழிற்சாலை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், அத்தொழிற்சாலையானது சாதிமத பேதமின்றிச் சனோபகாரமாக இருக்கவேண்டுமென்பதுமேயாம். சுபம்! சுபம்!!

செல்வங் கல்விச் சிறப்பு மலிந்திடப்
பல்விதத் தொழி லாளர் பயன்பெற
நல்வினைக் கணின் ஞானர்க ணலம்பெறச்
சொல்வழா நெறித் தூயவர் வாழ்கவே.

## தெய்வராயதேசிக சுவாமிகள் ஆதீன பரம்பரை சரித்திரம்

முற்றுப்பெற்றது.

சுபம்!